# காயத்ரி

## ஸ்ம்ருதி, கீதை, உபநிஷத்

விளக்கவுரை

ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரர்







வெளியிடுபவர்

காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1090050

65/=

# காயத்ரீ

## ஸ்ம்ருதி
## உபநிஷத்
## கீதை

உரையாசிரியர்

பண்டிட் கண்ணைய யோகி

வெளியிட்டவர்

காயத்ரீ சித்தர்

ஆர். கே. முருகேசு சுவாமிகள்

ஸ்ரீ காயத்ரீ பீடம்

ஸ்ரீ நகர்

82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ்

நுவரெலியா, (ஸ்ரீ லங்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

**காயத்ரீ ஸ்ம்ருதி, உபநிஷத், கீதை**

முதற் பதிப்பு : 21ம் நாள் ஆனி குருப்பூர்ணிமா

உரிமை : காயத்ரி சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள்

வெளியீடு : ஸ்ரீ காயத்ரி பீடம்
82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ்,
நுவரெலியா,
இலங்கை.
T.P. +94-52-2222609
e-mail : gayathrim@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வந்தனம்

ஓம் ஆனந்த மானந்த கரம் ப்ரசன்னம்
ஞான ஸ்வரூபம் நிஜ போத ரூபம்
யோகீந்ர மீட்யம் பவரோக வைத்யம்
ஸ்ரீ ஸத்குரும் நித்யமஹம் பஜாமி.

குரோர் பிரஹ்ம குரோர் விஷ்ணு
குரூர் தேவோ மஹேஸ்வரஹ
குரு சாட்ஷாத் பரப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கண்ணைய யோகீஸ்வரர் துதி

காவி உடுத்திடாமல்
கமண்டலம் எடுத்திடாமல்
காட்டிடை அலைந்திடாமல்
கானலிடை நலிந்திடாமல்
பூவுலகதனை சுத்தப்
பொய்யென்றும் புகன்றிடாமல்
புறத்தொரு மதத்தினரை
புண்படப் பேசிடாமல்
வேலைகள் செய்தற்போதும்
தெய்வத்தைத் தெரிவோமென்று
தெளிவுறக்காட்டினாய்
உன் தினசரி வாழ்க்கை தன்னால்
தீவினை இருட்டைப் போக்கி ஜெகமெல்லாம்
விளங்கும் ஆன்மயோகி, ஞானதீபமே!

ஸ்ரீ கண்ணைய தேவனே
போற்றி! போற்றி!! போற்றி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

முன்னுரை

1.காயத்ரீ ஸ்ம்ருதி 01

2.காயத்ரீ உபநிஷத் 41

3.காயத்ரி கீதை 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

என்னை பிள்ளையாக ஈன்ற அன்னை, பிதா இருவருக்கும் முதல் வணக்கம் கூறி அடியேனை ஆட்கொண்டு ஆன்மஞானம் பெற வழிகாட்டி வரும் ஸத்குரு மூர்த்தியின் திருவடிகளுக்கு பலகோடி வணக்கங்கள் செய்து, காயத்ரி ஸ்ம்ருதி, கீதை, உபநிஷத் எனும் இந்நூலை வெளியிடுகிறேன்.

ஆன்ம ஞானம் பெற அருள்தாகம் கொண்டு பாரத நாட்டில் இமயம் முதல் குமரிவரை இறையருளை பெற வழிகாட்டக் கூடிய தகுந்த குருவைத்தேடி, அலைந்தேன். பூர்வ புண்ணிய தவப்பயனாய் ரிஷி பரம்பரையினரோடு தொடர்பு கொண்டு, மாபெரும் தவ ஆற்றலைப் பெற்ற, அருந்தவ யோகி எனக்கு ஞான குருவாக அமைந்து, அவர் கண்காணிப்பில் பல்லாண்டு காலம் காயத்ரி உபாசனை யாகசாதனை காயத்ரிசாதனை செய்து, அகிலமனைத்தையும் ஆக்கி, அமைந்தளிக்கும் ஆதிஸக்தி அன்னை காயத்ரி தேவியின் பரிபூரண அனுக்கிரக கடாக்ஷத்தைப் பெறும் பாக்கியத்தை பெற்றேன். அன்னை காயத்ரி தேவியின் பேரருளால், மண்ணுலகில் மறைமுகமாய் வாழ்ந்து வழிகாட்டி வரும் மகரிஷிகள், முனிவர்கள் ஆகியோரின் தொடர்பு கிட்டி, அவர்களின் அருளாசியும் கிடைக்கப் பெற்றது.

காயத்ரியைப் பற்றிப் பாரதநாட்டில் பல மொழிகளிலும் எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. காயத்ரியைப் பற்றி மாபெரும் வித்துவான்கள், சாஸ்திரிகள் எல்லோரும் அதிக ஆராய்ச்சியின் பேரில் நூல்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளில் கிடைக்க முடியாத காயத்ரி பற்றிய பல இரகசிய வித்தைகளின் உண்மையை மகான்கள்,பொது மக்கள் அறியாதவாறு மறைத்து வைத்து அவர்களை அடுத்து நிற்கும் சீடர்களுக்கு மட்டும் நேர்முகமாகக் கற்பித்து வருகின்றனர். வேத மந்திரங்களில் காயத்ரி நான் என்கிறான் கீதையில் கண்ணன். காயத்ரியை விட சக்தி நிறைந்த விலைமதிக்க முடியாத இரத்தினங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற மந்திரம் மண்ணுலகிலுமில்லை, விண்ணுலகிலுமில்லை. நான்கு வேதங்களின் தாய் காயத்ரி.

மகரிஷிகளின் கண்காணிப்பில் இயங்கி வரும் ஸ்ரீ காயத்ரி பீடத்தில் காயத்ரி மந்திர உபாசனா சாதனா தீட்சை தகுந்தவர்களுக்கு அளித்து இறை இன்பத்தை அனுபவிக்கச்செய்து வருகின்றது. எனது ஸத்குரு மூர்த்தியிடம், மகரிஷிகளிடமும் கற்று பெற்ற ஆன்ம இரகசியங்களையே கட்டுரைகளாக, பாடங்களாகத் தொகுத்து ஆன்ம தாகம் கொண்டு இறையருள் பெற விரும்பும் இறை சாதகர்களுக்காக இந்த நூலை, மகரிஷிகளின் அருளாசியோடு வெளியிடுகிறோம்.

காயத்ரி மந்திர ஜப சாதனை செய்யும் அனைவரும் இந்நூலை ஏகாக்ர சித்தமாய் படித்து தமது சித்தத்தில் பதித்து குரு பக்தியுடன் காயத்ரி ஜபத்தை தினமும் செய்து வருவார்களேயானால் இதில் விளக்கப்பட்ட பண்புகள் அனைத்தும் தம்முள் விழிப்படைந்து மனித உடலில் நடமாடும் தெய்வசக்தி படைத்த சித்த புருஷர்களாக சகல போக பாக்யங்களுடனும் இறை இன்பத்தை அனுபவித்து வருவார்களென்பது உறுதி.

உலகமாம், துயரக் கடலைத் தாண்டி பேரானந்தமென்னும் அக்கரைக்கு அழைத்துச் செல்லும் படகு போன்றது இந்நூல். இதை வாசித்து சாதனை புரியும் ஒவ்வொருவரும், நிச்சயம் இறையின்பத்தைப் பெற்று பிறவாப் பேரின்பப் பெருநிலையை அடைவார்கள்.

ஓம் சாந்தி

**ஆர்.கே. முருகேசு சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி சித்தரின் ஆன்மீக படைப்புகள்

01. தியானம் என்றால் என்ன?

தியானம் என்பதன் உண்மை விளக்கம் பற்றி எளிய நடையில் கூறும் தியான சாதகர்கள் அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

02. ஏகாக்ர விஞ்ஞானம்.

தியானத்திற்கு முதல் படியான ஏகாக்ர நிலை என்பது என்ன? ஏகாக்ரத்தில் மனம் எப்படி இருக்கும்? அந்நிலையில் மனதிற்கு என்ன திறமை உண்டாகிறது? என்ற விளக்கங்களுடன் ஏகாக்ர நிலையை அடையும் பல சாதனா முறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

03. மானச யோகம்.

மனம் எனபது என்ன? மனிதனில் எவ்வாறு செயல்படுகிறது? எனபதை யோக விஞ்ஞானத்தின் படி முழுமையாக மனதைப்பற்றி கூறும் யோக நூல்.

04. எளிய முறை யோகப்பயிற்சி.

உலகவாழ்வில் இருந்து தினசரி சிறிது நேரம் சாதனைக்கென ஒதுக்கி எவரும் எளிதில் பயின்று உயர்ந்த யோகத்தின் பெரும் பயன்களை படிப் படியாகப் பெற எளிய வழி கூறும் நூல்.

05. காயத்ரி மந்திர மகிமை.

காயத்ரி மந்திரத்தின் மகிமையை அனைவரும் விளங்கக் கூறும் நூல்.

06. யாக விஞ்ஞானம்.

யக்ஞ சாதனை பலன் தரும் விதம் பற்றி விஞ்ஞான விளக்கத்துடன் யாக சாதனையால் பெறக்கூடிய பலன்கள், தினசரி காயத்ரி சாதனையுடன் செய்யக்கூடிய காயத்ரி ஹோம முறை, இல்லறசாதகர்கள் தினசரி எளிதாகச் செய்யக்கூடிய இல்லற வேள்வி என்பன விளக்கப்பட்டுள்ளது.

இவை தவிர முப்பத்தைந்திற்கு மேற்பட்ட காயத்ரி சாதனா, மானச, ஆத்ம, யோக, ஞான வித்தைகள் பற்றிய சாதனா நூற்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஸ்ரீ காயத்ரி பீடத்தில் கிடைக்கும். காயத்ரி உபாசனா சாதனை செய்து பயன்பெற விரும்புபவர்களிற்கு காயத்ரி தீட்சை அளித்து யோக சாதனைகள் கற்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி உபாசனா தீக்ஷை

முறையாக காயத்ரி உபாசனை செய்து பயன்பெற விரும்பும் சன்மார்க்க சீலர்களுக்கு சாபமோசனம் செய்வித்து காயத்ரி தீக்ஷை அளிக்கப்படும்.

சாதாரணமாக எப்படியும் தெரிந்து கொள்ள முடியாத இரகசியங்கள் பாடங்களில் அடங்கியிருக்கும். தெய்வ இரகசியங்களை நவீன விஞ்ஞான விளக்கங்களுடன் தெரிந்து கொள்ள இது அரிய வாய்ப்பு. பல வகை சாதனைகள் படிப்படியாக கற்பிக்கப்படும்.

யோக வித்யா, காயத்ரி குப்த விஞ்ஞானம், சித்மன் பயிற்சி, இரகசிய வித்யா சாதனை, சித்த யோக பாடங்கள், பிரணாயாம, ஏகாக்ர விஞ்ஞானம், இராஜ, ஹட, குண்டலினி, தப, ஷட் சக்ர பேதன யோக சித்திகள் பெறும் முறைகள் முதலான பல்வேறு ஆன்மீக கலைகள் விஞ்ஞான விளக்கங்களுடன் அனுபவப் பயிற்சிகளுடனும் கற்பிக்கப்படுகின்றன. தேவையானோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ காயத்ரி சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள்
ஸ்ரீ காயத்ரி பீடம்
82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ்,
நுவரெலியா,
இலங்கை.
T.P. +94-52-2222609
e-mail : gayathrim@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ ஸ்ம்ருதி

காயத்ரீ மந்திரம் மிகச் சிறியதுதான்: ஆனால் அதில் பொதிந்து கிடக்கும் பொருளும் சக்தியும் மிகப் பெரியது. ரிஷிகளின் சாதனா மந்திரமாக இருந்த காயத்ரீக்கு ஒவ்வொரு ரிஷியும் ஒவ்வொரு விதமாகப் பொருள்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறெல்லாம் பொருள் கொள்ளுதற்கு காயத்ரீ மந்திர எழுத்துக்களும் சொற்களும் இடம் தருகின்றன. ஒவ்வொரு எழுத்தும் தன்னுள் பல பொருள்களை வைத்திருக்கிறது. ஒவ்வொரு சொல்லும் தனக்குள் பல கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. இதனாலேயே காயத்ரீ மந்திரம் ஆழம் காணமுடியாத கடல் போன்றது. கடலில் மூழ்கினால் முத்து, பவளம் போன்ற அரிய பொருள்கள் காணக்கிடைப்பது போல் காயத்ரீ மந்திரத்தினுள்ளே புகுந்தால் அரிய பல ஆன்மீக தெய்வீக பொருள்களைக் காணலாம் என மந்திர வல்லுனர்கள் கூறியிருக்கிறார்கள்.

காயத்ரீ மந்திர எழுத்துகளில் சொற்களில் பல அரிய பொருள்கள் இருப்பது போலவே அதன் ஒவ்வொரு எழுத்திலும் அரிய சக்திகள் அடங்கியிருக்கின்றன. அந்த சக்திகள் விழிப்புறுவதால் காயத்ரீ சாதகன் பெறும் அரிய பலன்களைக் கூறுவதே **காயத்ரீ ஸ்ம்ருதி.** அதை கருத்துரை விளக்கவுரைகளுடன் மாத்திரம் இதில் வெளியிடுகிறோம்.

- யோகி கண்ணையா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 1

பூர், புவ, ஸ்வ; என்பவை மூன்று உலகங்கள். இம்மூவுலகங்களிலும் 'ஓம்' எனும் பிரம்மம் வியாபித்துள்ளது. எந்த அறிவாளி இப்பிரம்மத்தை அறிவானோ அவனே உண்மை ஞானியாவான்.

விளக்கவுரை:

மூவுலகங்கள்: ஆன்மா பிறந்து, பிறந்து இறக்கும் பரிணாமத்தில் இருக்கும் வரை அன்னமய, பிராணமய, மனோமய கோசங்களை மாறி மாறிப் பெற்று, இக்கோசங்கள் ஆகும் பொருள்களுக்கு உரித்தான பூர்லோகம் - பிராண உலகம், புவர்லோகம் - மனவுலகம் - ஸ்வர் அல்லது ஸ்வர்க்க லோகம் ஆகிய மூன்று உலகங்களிலும் மாறி மாறி வசித்துக்கொண்டிருக்கும். மண்ணுலகில், மண்ணுடலை விட்ட எல்லா ஆன்மாக்களும், இதையடுத்து பிராண உலகில் பிராண உடலுடன் பல காலம் வாழ்ந்து, பின் அதையும் விட்டு, மன உலகில் மன உடலுடன் பல காலம் வாழ்ந்து, பின் மன உடலையும் விட்டு, காரணவுடலுடனிருந்து, மறுபடி முறையே மன, பிராண, மண்ணுடல்களை யேற்று, மண்ணுலகில் பிறக்கின்றன. பரிணாமத்தில் இருக்கும் வரை எல்லா ஆன்மாக்களும் இதே முறையில் உழன்று கொண்டிருக்கும். இம்மூவுலக பரிணாமத்தில் இருக்கும் வரை ஆன்மா இயற்கையின் கைப்பாவையாகவே இருந்து வரும். இம்மூவுலகங்களின் உள்ளும் புறமும் பிரம்மம் வியாபித்திருப்பதால் எங்கும் அதை அறிந்து உய்ய முடியும்.

ஓம் யெனும் பிரம்மம்: கடவுள் நாமம், ரூபம் அற்றவர். மனிதன் எதையும் நாம ரூபத்தில்தான் அறிய முடியும். பெயர் சொல்லாமல் மனிதன் எதைப்பற்றிப் பேச, நினைக்க முடியும்? அதனால் சகல பொருள்களுக்கும் மனிதன் பெயர் வைத்துக் கொள்கின்றான். பெயருக்கும், பொருளுக்கும் உண்மையில் எந்த சம்பந்தமுமில்லையாயினும் மனிதன் பெயரால் பொருளை அறிந்து கொள்கின்றான். மனிதன் வைத்த பெயர்களில் சில இடுகுறிப்பெயர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காரண பெயர்கள், சில காரண இடுகுறிப் பெயர்கள். மனிதன் கடவுளைக் குறிக்கக் காரணப் பெயராக வைத்துக் கொண்டது 'ஓம்'. ஓம் என்ற சொல்லில் அ- உ- ம் என்ற மூன்று உச்சரிப்புகள் இருப்பதும், இம்மூன்றும் சப்தத்தை தோற்றுவித்து, குவித்து நிறுத்துவதன் மூலம் உச்சரிக்கப்படுவதாலும் இதே போல் இறைவன் பிரபஞ்சத்தை ஆக்கி, அமைத்து, அழிப்பதாலும் இறைவனுக்கு இப்பெயரை இட்டான்.

பிரம்மத்தை அறிபவன் ஞானி; 'பிரம்மசத்யம், ஜகன் மித்யா' என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு. காணப்படும், அனுபவிக்கப்படும் பிரபஞ்சம் உண்மையில் உண்மையானதல்ல, மயக்கமுடையது, ஜாலம் போல தோற்றமளிப்பது. இப்பொய்த்தோற்றத்தின் மறைவில் உண்மையான இறைவனின் வியாபகம் இருக்கிறது. ஆக தோன்றும் பொய்த்தோற்றத்துடன் இருக்கும் உண்மைப் பொருளான இறைவனை அறிபவனே ஞானி, உண்மையை அறிந்தவன், இறைவனை அறிந்தவனின் மாய மலங்கள், அழுக்குகள் எல்லாம் அழிந்து போகும். ஞானி அழுக்கறுந்தவன்.

தோன்று பொருளின் உள் தோன்றா நிலையில் இருக்கும் இறைவனை அறிவது எப்படி? காயத்ரீ சாதனையால் இதற்கான பண்பு ஏற்படும். காயத்திரீ மந்திரத்தின் பூர், புவ, ஸ்வ என்ற சொற்களின் அலைகள் முறையே மூவுலகங்களிலும் வியாபித்திருக்கும் இறைவனை அறிவிப்பவையாகச் செயல்படுகின்றன. காயத்ரீ உபாசகன் மூவுலகங்களிலும் வியாபித்திருக்கும் இறைவனை அறிந்து, மாயையை அகற்றி ஞானியாவான்.

- ஓம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 2

உண்மையை அறிந்த வித்வானான பிராம்மணன் தன் தபச் செய்கையால் உலகில் அஞ்ஞானத்தாலுண்டான இருளை விலக்க வேண்டும்.

விளக்கவுரை:

பிராமணன் என்றால் உண்மையை அறிந்தவன், பேரின்பம் பெறுவதற்கான வித்தையை அறிந்தவன். உண்மையை அறியாத, வித்தையை அறியாத பல கலைகளையும் கற்றவன் பிராமணனாக மாட்டான். இத்தகைய வித்வான் பிராமணன் தன் சொந்த தவத்தால், நல்லொழுக்கங்களால் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருக்கும் மக்களின் அறியாமை இருளைப் போக்க முயற்சி செய்யக்கடவன்.

தானேயொன்றை உண்மையென்று அறிந்து கொள்ளாதவன் அது உண்மையென்பதைப் பிறருக்குச் சொல்ல முடியாது. தன்னுடைய அறியாமை இருளை அகற்றிக் கொள்ளாதவன் பிறரின் இருளை அகற்ற வழி சொல்ல முடியாது. தவங்களைச் செய்து சித்தியடையாதவன் பிறருக்கு தவநெறிகளை போதிக்க முடியாது.

பிரம்மத்தை அறிந்தவன் பிராமணன். தவங்களைச் செய்து அதன் சக்தியில் தன் அஞ்ஞான இருளைப் போக்கிக் கொண்டவன்தான் பிரம்மத்தை அறிய முடியும். அதனால் அவனே பிராமணனாக முடியும்.

சாதாரண மக்கள் உண்மையை அறிந்து கொள்ள, அதை அறிந்த ஒருவனின் உபதேசம் பெற்றாக வேண்டும். அதனால் உண்மையை அறிந்து, அஞ்ஞான இருளை அகற்றிக் கொண்ட பிராமணன் மற்றவர்களின் இருள் அகல வழிகாட்டி வரவேண்டும். அருள் புரியும் தெய்வத்தின் அருளுக்குப் பாத்திரமானவர்கள், அத்தெய்வத்தை போலவே பிறருக்கு அருள் புரியும் தன்மையாயிருந்து வரவேண்டுமல்லவா? 'தவம்' என்றவுடன் பலர் காட்டுக்குச் சென்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்களை, சருகுகளையுண்டு, கண்மூடித் தவிப்பதென நினைக்கிறார்கள். அப்படி பொருள் கொள்ளக் கூடாது. தெய்வ சாதனைகள் எல்லாமே தவங்கள்தான். காயத்ரீ சாதனையே பெரிய தவம்.

காயத்ரீ சாதனையாம் பெரும் தவத்தைச் செய்பவர்களுக்கு காயத்ரீ மந்திரத்தின் "தத்" சொல்லால் எழும் சூஷ்ம அலைகள், அவர்களை பற்றியிருக்கும் அறியாமை இருளைப் போக்கி அவர்களுக்கு பிரம்ம ஞான உண்மையை உணர்த்தி வருகின்றது. இதனால் இவர்கள் பிராம்மணத்துவம் பெறுகிறார்கள். இத்தகையோர் தாம் சென்ற இப் பெரு நெறிபற்றியும் அதனால் விளையும் பெரும் பயனைப் பற்றியும் அஞ்ஞான இருளில் ஆழ்ந்து கிடக்கும் மற்ற மக்களுக்கு யெடுத்து சொல்லி, மற்றவர்களையும் தாம் பெற்ற பெரும் பேற்றினைப் பெறச்செய்ய வேண்டியது கடமையாகும். இதுவே அவர்கள் பெற்ற பெரும் பயனுக்குச் செய்யும் கைமாறாகும்.

- ஓம் ஞானம் பவது -

# ஸ்ம்ருதி -3

சத்திய சந்தர்களும், வீரர்களும், லோகரசஷகர்களுமான, ஸத்திரியர்கள், அநியாயத்தாலும், அசத்தியத்தாலும் உண்டாகும் ஆபத்துக்களை நாசம் செய்பவர்கள்.

விளக்கவுரை:

ஒவ்வொருவரும் பிறக்கும் போதே சில இயற்கை பண்புகளுடன் பிறக்கிறார்கள். அதன்படிதான் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியும். இந்த அடிப்படையில்தான் 'வர்ணதர்மம்' ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று வர்ணதர்மம் ஜாதி தர்மமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிலேயே உடல் வலிமை, நியாய அநியாயங்களைப் பகுத்தறியும் தன்மை, வீரத்தன்மை முதலிய பண்புகளோடு பிறப்பவர்கள் சத்திரியரெனப்படுவர். நியாய, அநியாயங்களை பகுத்தறியும் தன்மையுடைவர்களாதலால், அவர்கள் உண்மையை அறியக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன்பிறவி பண்புகளால் சமூகத்துக்கும், சமுதாயத்துக்கும் என்ன உதவி செய்யமுடியுமோ, அதனைத்தவறாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் எல்லோரும் சவுக்கியமாய் வாழ்ந்து, அவரவர்களின் குறிக்கோளைச் செய்ய முடியும். முன் சொன்ன சத்திரியர்கள் சமூகத்துக்கு செய்யக்கூடிய உதவி சமூகத்துக்கேற்படும் பலவகை ஆபத்துக்களையும் அழித்து, சமூகத்துக்கு ஷேமத்தை உண்டாக்குவதே. சத்திரியதர்மம் குறைந்த நாட்டில் திருடு, கொலை, களவுகள் அதிகமாயிருக்கும், அன்றி அந்நாடு விரைவில் பிறர்க்கு அடிமையாகிவிடும். உலகில் அடிமையாயிருந்து, விடுதலை பெற்றநாடுகளெல்லாம் இதற்கு சாட்சியாகும். ஆனால் சத்திரிய குணம் நிரம்பபெற்றவர்கள், தம் வீரத்தைக்கொண்டு அகங்காரம்படைத்து, பிறரைத்துன்புறுத்தி, மிரட்டி, பயம்காட்டி வாழ்வதையே பெரும்காரியமாக மேற்கொண்டிருப்பதை நாம் அனுபவத்தில் அறியலாம்.

தெய்வ நம்பிக்கையும், அருளும், பிற்கால வாழ்க்கையில் நிலைத்தெளிவும், இல்லாதவனுக்கு உண்டாகும் பலம், செல்வம், கல்வி முதலியவை பிறருக்கு தீமை பயக்கவும் அவர்கள் வளர பாபத்தை வளர்க்கவும்தான் பயன்படுமன்றி, தமக்கும், மற்றோருக்கும் நன்மை செய்வதில் பயன்படாது. அப்படியானால் சத்திரியர்கள் தம் சத்திரிய பண்புகளைக் கொண்டு, சமூகத்திற்கேற்படும் இன்னல்களைப் போக்கும் நல்லவர்களாக, சன்மார்க்கர்களாக ஆகி சத்ரிய தர்மத்தால் தமக்கு நன்மையைத் தேடிக் கொண்டு, பிறருக்கும் நன்மையை தேடித்தரவேண்டுமானால் அவர்கள் என்ன செய்ய வேண்டும்? காயத்ரீ உபாசனை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரீ மந்திரத்தின் ஸவிதா என்ற சொல்லிலுள்ள முதலெழுத்தாகிய "ஸவி" யால் எழும் அலைகள் சத்ரிய தர்மம் படைத்தவர்களை, சமூக விரோத சக்திகளை அழிக்கும் நன்நெறியில் செலுத்தும் புத்தியை உண்டாக்கும். இதனால் அவர்களின் சத்திரிய தர்மம் அவர்களுக்கு பலனளித்து, பிறருக்கும் பலனளிக்கும் பெருநெறியில் இயங்கும். அதனால் சத்ரியர்கள் தம்பலம் முதலியவை தமக்கு பாபத்தை தேடிதராமல், புண்ணியத்தை தேடித்தந்து தம் பிறவிப் பயன் பெற்றுய்ய வேண்டுமானால் அவர்கள் தவறாமல் காயத்ரீ உபாசனையைச் செய்து வரவேண்டும்.

- ஓம் பலமஸி பலம்மயி தேஹி -

# ஸ்ம்ருதி - 4

நல்ல ஆன்மீகன், பயங்கர பிரளய சமயத்திலும், தன்முயற்சியைச் செய்து கொண்டேயிருப்பான். உழைப்பின், முயற்சியின் புகழும், மகிமையும் எல்லையற்றது.

விளக்கவுரை:

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நன்மையும் தீமையும் மாறிமாறி வரத்தான் செய்யும். நன்மை வந்த போது சந்தோஷித்து, தீமை வந்த போது கலங்கி, வருந்துபவன் தெய்வ அருள் பெறக்கூடிய ஆன்மீகனாயிருக்க முடியாது. 'சுகதுக்கேஹி ஸமத்வம் யோகமுச்யதே' இன்ப துன்பங்களில் நடுநிலையாயிருத்தலே யோகம் என கீதை கூறுகின்றது.

துன்பங்கள் வந்த போது சாதனையைக் கைவிடுபவன் எந்நாளும் பயனடைய மாட்டான். எத்தகைய துன்பம் வந்தாலும் தன்சாதனையை விடாமல் செய்பவன்தான் பேரருளைப் பெறமுடியும். துன்பங்களை எதிர்த்து தைரியமாய் அவைகளின் பாதைகளிலிருந்து மீண்டாக வேண்டும். துன்பங்களை எதிர்க்க நான்கு பண்புகள் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை விவேகம், தைரியம், துணிவு, முயற்சி. இந்த துன்பம் எத்தகையது எப்படி மாற்ற முடியுமெனக் கண்டறிவது 'விவேகம்'. இந்த முறையில் இதையெதிர்த்தால் என்ன ஆகுமோஎன்று அஞ்சாமையும், அத்துன்பத்தால்யேற்படும் விளைவுகளை மனங்கலங்காமல் மேற்கொள்வதும் 'தைரியம்'. எப்படியாவது அதை அகற்ற வேண்டும் என்று முடிவு செய்வது 'துணிவு'. செய்த முடிவின்படி செயலாற்றுவது 'முயற்சி'. இந்நான்கையும் கொண்டு எத்தகைய துன்பங்களையும் மனிதன் வென்றுவிட முடியும். ஆனால் இந்நான்கு பண்புகளையும் மனிதனுக்கு எப்படி உண்டாகும்? காயத்ரீ மந்திர ஜபத்தில் "து" யெனும் எழுத்தால் யெழும் அலையதிர்வுகள் அவனில் இந்நான்கு பண்புகளையும் தோற்றுவிக்கும். பராசக்தியின் அருளால் பெறும் இப்பண்புகளைக் கொண்டு சாதகன் எத்தயைகைய துன்பத்தையும் தைரியமாயேற்று விரைவிலும், எளிதிலும் அதிலிருந்து மீண்டுவிடுவான்.

நெருப்பில் பட்ட தங்கம் அழுக்கு நீங்கி சுத்தமாவது போல கல்லில் உராயப்பட்ட கத்தி கூர்மையாவது போல துன்பங்களால் வாடுபவனின் சித்தம் பாபசமஸ்காரங்களிலிருந்து சுத்தமாகி, அறிவு, கூர்மையாகி, விரைவில் இறையருளைப் பெறும் வண்ணம் மாறுவான். ஆனால் துன்பமும் இப்படி நன்மையாக வேண்டுமானால் அவன் துன்பத்தைக் கண்டு அஞ்சி ஓடலாகாது. துன்பத்தின் வேதனைக்கு உள்ளாகி, கலங்கி சோர்வடையக் கூடாது. இப்படி செய்தால் துன்பம் அவனை அழித்துவிடும். முன் சொன்ன நால்வகை துன்பயெதிர்ப்புக் குணங்களைத் தன்னுள் உண்டாக்கிக் கொண்டு எதிர்படும் எத்தகைய துன்பத்தையும் எதிர்கொண்டழைத்து, அதனை வென்று மீளவேண்டும். இப்படி செய்தால்தான் அவனையடையும் ஒவ்வொரு துன்பமும் அவனுக்கு தெய்வ அருள் பண்பை உண்டாக்கிச் செல்லும்.

காயத்ரீ உபாசனையால் முன்சொன்ன துன்பயெதிர்ப்புக் குணங்களைத் தன்னுள் வளர்த்துக் கொள்பவன், எத்தகைய துன்பத்தையும் எதிர்த்து மீண்டு சித்த சுத்தியையும், அறிவுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மையையும் பெற்று இறையருள் பெறும் நெறியில் முன்னேறிச் செல்வான்.

ஓம் தைரியவான் பவ -

# ஸ்ம்ருதி - 5

கருத்துரை:

**மனித சந்ததிகளை உண்டாக்குபவள் பெண்ணல்லாது வேறு யார் எனச் சொல். அதனால் பெண்கள் தம் ஆக்கத் திறமையை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.**

விளக்கவுரை:

எறும்பு முதல் யானையீறாக சகல ஜீவராசிகளும் பெண் குலத்தின் கருவில் தான் உருவெடுத்து பிறக்கின்றன. தாவரங்களிலும் தனி ஆண்மையுடைய தாவரங்கள் காய் கனிகளைத் தரா. ஆண்மகன் உருவுக்கு ஆதாரமாக ஒரு துளி கருவைப் பெண்ணிடம் செலுத்துவதோடு தன் ஆக்கப்பணியை முடித்துக் கொள்கின்றான். ஆனால் இப்படிக் கொடுக்கப்பட்ட ஒரு துளி கருவை கொஞ்ச கொஞ்மாய் உருவாக்கி முழு உருவில் உலகத்துக்களிப்பவள் பெண். கருவில் உருவாகும் உடலை மட்டும் பெண் உண்டாக்குவதில்லை. அவ்வுடலில் செய்யப்படும் மனநிலையை மாற்றுவதிலும் அவள் பெரும் பங்கு கொள்கின்றாள். கர்மப் பிரபாவத்தை அவள் யேதும் செய்ய முடியாதாயினும் பிராப்த கர்மத்தாலான இந்தப் பிறப்பில் அடுத்து சேமிக்கப்பட வேண்டிய கர்ம முறைகளை மனதில் வகித்துக் கொண்டிருப்பவள் பெண் தான். கர்ப்பத்தில் இருக்கும் போதும், பெற்றபின் வளர்க்கும் போதும், இந்தப் பிறவியில் அது ஒழுக வேண்டிய, செய்ய வேண்டிய முறைகளைப் பெண் அறிந்தோ, அறியாமலோ ஊட்டி விடுகிறாள். தொட்டிலில் வைத்து ஆட்டும் போது அன்னை கற்பிக்கும் பழக்கம் சுடுகாடுமட்டும தொடர்ந்து நிற்கின்றது. பிரகலாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் கருவிலிருந்தே நாரதனின் ஞானத்தை அன்னை வழிப்பெற்றான். அசுரர்கள் பலர் தம் அசுரத்தன்மையை அன்னையின் கருவிலேயே அடையபெற்று வருகிறார்கள். வீர சிவாஜியை புதியதொரு சாம்ராஜ்யம் நிலைநாட்டுமளவுக்கு வீரனாக்கியது அவன் அன்னை ஜீகாபாய்தான் என்பதை உலகம் நன்கறியும்.

ஆக மனிதர்களின் பிராப்த கர்மத்தைத் தொடராமலே, அவர்களின் பிறப்பில் சஞ்சித கர்மாக்களுக்கு வழிவகுக்கச் செய்பவர்கள் பெண்கள். இவர்கள் தம் ஆற்றலையும், செய்யும் பணியின் சிறப்பையும் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால், நல்ல முறையில் உபயோகிக்காவிட்டால் உலகில் நல்லவர்களேயிருக்க மாட்டார்கள். இவ்வளவு சிறப்புக் குரியவர்களாக இருந்தும் பெரும்பாலான பெண்கள் தம் திறமையை நல்ல முறையில் அறிந்து, உபயோகிக்காததால் உலகில் கயவர்களின் அளவு அதிகரித்து வருகின்றது.

பெண்கள் எப்படி தம்முடைய இந்த சிறப்பை சரியாக அறிந்து, பயன்படுத்தி தம் அரிய பிறவியைப் பயனுடையதாகச் செய்துகொள்ள முடியும்? காயத்ரீ மந்திரத்தின் “வ” என்ற அட்சரம் இதற்கு வழி செய்கிறது. பெண்களும் தம் கடமைகளையறிந்து நல்ல முறையில் செயலாற்றி, தம்பிறவியைப் பயனுடையதாகச் செய்து கொள்ள வேண்டுமானால் அவர்களும் காயத்ரீ உபாசனை செய்து வர வேண்டும். காயத்ரீ மந்திரத்தின் வ - உச்சரிப்பிலெழும் அலைகள் அவர்களுக்குத் தம் கடமைகளை உணர்த்தி , நல்லமுறையில் செயல்படச் செய்யும்

- ஓம் ஸத்யவான் பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 6

அறிவாளிகள் பெண்களையே மண்ணுலகில் பிரத்யக்ஷ லக்ஷ்மிகளாகக் கண்டிருப்பதால் நல்லோர்கள் எப்போதும் நர்மதா நதியைப் போல் பெண்களை மதித்தொழுக வேண்டும்.

விளக்கவுரை:

தனம், தான்யம், வீரம், பலம் முதலியவைகளை கொடுத்தருள்புரிபவள் லசஷ்மி இவைகளைப் பெறுவதற்கான அறிவு, ஆற்றலை வளரும் குழந்தைகளின் பதிப்பிப்பவள் பெண். கர்ப்பத்திலிருக்கும் போதும், பிறந்து வளரும் போதும் கர்மச் சுபாவத்துடன் ஆகாம்ய கர்மசம்ஸ்காரங்களைப் பதிப்பிப்பவள் அன்னை இந்த சமஸ்காரத்துக்குத் தகவே மனிதன் முயல்வான், வாழ்வான், பூர்வகர்ம சம்ஸ்காரத்துக்குத்தக பலனை அனுபவிப்பான். கர்ம சம்ஸ்காரம் நற்பலனைத் தருவதாயிருந்தாலும், மனித முயற்சி அவ்வழியில் செல்லவில்லையானால் அது இப்பிறவியில் செயல்படாமல் தடைப்பட்டு, மற்றோர் பிறவியில் செயல்படத் தொடங்கும். இதைச் சற்று விபரமாய்ப் புரிந்து கொள்வது நல்லது. ஒருவனுக்கு அவன் நாற்பதாவது வயதில் நல்ல பொருள் வருவாய் வரவேண்டியதாக பூர்வ கர்மம் இருக்கிறது. ஆனால் இவன் தான் செய்துகொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு சோம்பேறியாய் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். இவனுக்கு இக்கர்மம் எப்படி பலிக்கும்? வழியில்லை. அதனால் அக்கர்ம சம்ஸ்காரம் அப்படியே செயல்படாமல் சித்தத்தில் நின்றுவிட வேறு சம்ஸ்காரங்கள் செயல்படத் தொடங்கும். நின்றுவிட்ட சம்ஸ்காரம் தகுந்த சூழ்நிலை உருவாகும் மற்றோர் பிறவியில் தான் செயல்படும். இதேபோல் பூர்வ கர்மம் ஒருவனைக் கல்விமானாக்குவதாயிருந்தாலும் அதற்கான சூழ்நிலையில், முயற்சியில் அவன் ஈடுபட்டால் தான் அது பலிதமாகும்.

பள்ளிக்கே போகாமலிருக்கும் பிள்ளைக்கு இச்சம்ஸ்காரம் எப்படிச் செயல்படும்? அதுவும் தடைப்பட்டு மறு பிறவிக்கு சித்தத்தில் போடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிறவியில் தாய்தந்தை மூலம் புகுத்தப்படும் சம்ஸ்காரத்தை கொண்டு தான் பூர்வ சம்ஸ்காரம் செயல்படும். இதற்காகவே குழந்தை வளர்ப்பு முறைப்பற்றிய நீதிகள் எழுந்துள்ளன. இப்பிறவியில் நல்ல சம்ஸ்காரங்களையே புகுத்திவைத்தால் பூர்வ வினையில் நல்லவை மட்டும் செயல்படும். கெட்டவை தடைப்படும். சில பிறவிகள் தொடர்ந்து நல்லவைகளே செயல்படச் செய்து வந்தால் கெட்ட சம்ஸ்காரங்கள் செயல்பட முடியாமல் நலிந்து அழிந்து போகும். அதனால் பூர்வகர்மம் எத்தகையதாயினும் அதில் நல்லது, கெட்டதை அனுபவிக்கச் செய்வது அன்னை புகுத்தும், கற்பிக்கும் சம்ஸ்காரங்களில் தான் இருக்கிறது. ஆகவே மண்ணுலகில் மக்கள் ஆரோக்கிய ஸ்வர்கமாதிகளைப் பெறச் செய்பவர்கள் பெண்களாகிய லஷ்மிகளே.

நர்ம - என்றால் மிருது. நர்மதா - மிருதுவாக பாயும் நதி. அது புண்ணிய நதிகளில் ஒன்று. தெய்வீக நதிகளில் ஒன்று. அதனால்தான் எல்லோரும் அதனுடன் பக்தி மரியாதையுடன் இருப்பார்கள். அதே போலவே அதனிடம் பக்தியாயிருப்பவர்களிடம் பாபங்கள் விலகிப் புண்ணியம் கிடைப்பது போலவே, பெண்களாகிய லசஷ்மிகளிடம் பக்தியாயும் மரியாதையாயும் நடந்து கொண்டால் அவர்கள் மனித இனத்தை நல்ல வழியில் முன்னேறச்செய்து விடுவார்கள். துன்பத்தால் வாடும் பெண், குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க முடியுமா? கோபத்தாய் குழந்தைக்கு விஷமாக அல்லவோ ஆவாள்?

பெண்களிடம் மரியாதையாக ஒழுகும் சீரிய பண்பை காயத்ரீ உபாசகன் பெறுவான். காயத்ரீ மந்திரத்தின் "ரே" அட்சரத்தின் அலை இதற்கான பண்பை உபாசகனில் உண்டாக்குகிறது.

- ஓம் பூஜ்ய பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 7

இயற்கையின் ப்ரக்ருதியின் உத்தரவுபடி தம் பாதங்களை இயக்குபவர்கள் நடப்பவர்கள் அனுசரிப்பவர்கள் ஆரோக்கிய வான்களாயிருந்து எல்லா நோய்களிலிருந்தும் நிச்சயமாய் விடுபடுவார்கள்.

விளக்கவுரை:

நாகரீகத்தின் பெயரால் விஞ்ஞான சாதனைகளின் பெயரால் இன்று மனித இனம் இயற்கை வாழ்க்கையை விட்டுச் செயற்கை வாழ்வில் வேகமாய் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. இதன் பயனாக ரோக பட்டியல்களின் எண்ணிக்கை வளர்ந்து வருகின்றது. மருத்துவ முறைகள், மருந்து வகைகள் மலிந்து கொண்டே வருகின்றது. அதற்குத்தக புதுப்புது நோய்களும் வளர்ந்துக் கொண்டே வருகின்றது. உடல் நிலை மாறுவதுடன் மனநிலையும் மாறிக் கொண்டே இருக்கின்றது. கபடம், சூது, வஞ்சனை, சுயநலதன்மைகளில் மனித் இனம் முன்னேறிக் கொண்டு வருவதை யாரறிய மாட்டார்? ஆக மனித இனம் அழிவுப்பாதையில் வேகமாய் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. இதற்கு காரணம் இயற்கையின் உத்தரவை மீறி மனிதன் செயற்கையை மேற்கொள்வதுதான் என்று சொல்லவும் வேண்டுமா?

உணவு, உடை, வாழ்க்கை முறையனைத்திலும் மனிதர் இன்று செயற்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். மருந்துகளிலும் மனித உடலுக்குச் சிறிதும் ஒவ்வாத பாஷாண மருந்துகள் தயார்செய்யப்படுகின்றன. இந்நிலையை மேற்கொண்டிருக்கும் வரை பூர்ண ஆயுளும் திட ஆரோக்கியமும், சந்தாஷ வாழ்க்கை என்பவை குதிரைக் கொம்பாகத்தான் இருக்கின்றதென்பதை உறுதியாக சொல்லலாம். ஆகவே குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வை மனிதன் வாழ வேண்டுமானால் அவன் செயற்கையை விட்டு இயற்கையை சரணடைய வேண்டும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் இயற்கையாகவே வாழ ஒருவன் நினைத்தாலும் அது அவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாது. இதற்கென அவனுக்குத் தனி ஒரு சக்தி, ஒரு தெய்வ உதவி கிடைத்து தகுந்த சூழ்நிலைகளை ஆச்சர்யமான, அமானுஷ்யமான முறையில் உருவாக்கிக் கொடுத்தாலான்றி இது இயலாத காரியம். இதற்கு ஒரே வழி காயத்ரீ உபாசனை. ஏனென்றால் காயத்ரீ மந்திர ஜெபத்தில் "ந்ய" என்ற அட்சர அலைகள், மனிதனை இயற்கை வாழ்வில் இருத்துவதற்கு வேண்டிய சூழ் நிலைகளை உருவாக்கிக் கொடுக்கின்றன.

பூரண ஆயுள், உறுதியான ஆரோக்கியம், இன்பமான வாழ்வு இவைகளைப் பெற விரும்புபவன் முறையாக காயத்ரீ உபாசனையை மேற்கொண்டு அதன் உதவியால் இயற்கை வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். காயத்ரீ உபாசகர்கள் நாளாவட்டத்தில் தம்மையறியாமலேயே இயற்கை வாழ்வை மேற்கொண்டு இன்பப்பெருவாழ்வைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

- ஓம் ஆரோக்கியவான் பவ -

# ஸ்ம்ருதி - 8

மனிதன் ஆவேசத்தையும், இருதயத்தின் உத்வேகத்தையும் விலக்க எல்லா நிலைகளிலும் மனதை அமைதியாகவும், நடுநிலையாகவும் வைத்து கொள்ள வேண்டும்.

விளக்கவுரை:

எதிர்பார்த்த காரியம் நடவாத போதும், கவலைப்படும் விடயங்கள் நடக்கும் போதும் மனம் அடையும் நிலை ஆவேசம் மனம் இந் நிலையை அடையும் போது ஒருவனின் அறிவு, விசாரணை, விவேகம் முதலியவை அழிந்து போகும். இப்படியே உத்வேக உணர்ச்சிகளுக்கு ஒருவன் உள்ளாகும் போது அவன் இருதய நடை பாதிக்கப்படும். இந்த இரண்டு நிலையும் ஒருவனில் அடிக்கடி ஏற்பட்டால் அவன் வாழ்க்கை சீர்குலைந்துவிடும். அறிவு மங்கிவிடும். தகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களைப் புரிந்து தடுமாறுவான். ஆரோக்கியம் சிதையும், ஆயுள் குன்றும். அதனால் முன்னேற விரும்பும் மனிதன், சவுக்கியமாக வாழ விரும்பும் மனிதன் இவைகளுக்கு எப்போதும் இடம்தராமல் எல்லா நிலைகளிலும் வாழ்க்கையில் என்ன ஏற்பட்டாலும் மனதை அமைதியாக, நடுநிலை குலையாதபடி வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் மாயையில் உழலும் மனிதன் உத்வேகங்களையும், ஆவேசத்தையும், அடக்கி வாழ முடியாது. அவன் விருப்பத்தால் நிறைவேற்றக் கூடாதுதென்று தெரிந்தாலும் கட்டுப்படுத்த முடியாது. மற்றோர் சூசஷ்ம சக்தி அவனுக்கு உதவி செய்தாலன்றி மனிதன் தானாக இந்த நடுநிலை மனதுடன் வாழ்க்கை நடத்த முடியாது.

காயத்ரீ மந்திரத்தின் 'பர்கோ' என்ற மந்திரத்திலுள்ள "ப" என்ற அட்ரத்தின் அலைவேகம் ஒருவனில் உண்டனால், அது அவனுக்கு நடுநிலைமை குலையாத மனநிலையை உண்டாக்க உறுதுணைசெய்யும். காயத்ரீ உபாசகன் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் எந்த வித சோதனைகள் வந்தாலும் தன் மனதின் நடுநிலையை இழக்காமல் கட்டுபடுத்தி வாழும் இன்ப வாழ்வைப் பெறுவான் !

- ஓம் ஸாந்தி ரஸ்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 9

மனோபாவங்களை மறைக்கமுயற்சிக்காதே! சகிப்புத்தன்மை இல்லாமல் இருக்காதே, பிறர் நிலை கண்டு அதற்குத் தக அவர்களுடன் ஒழுகு.

விளக்கவுரை:

உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவது கபடம், ஏமாற்று வித்தை, வஞ்சனை. உள்ளதை உள்ளபடி சொல்பவன் மக்களினத்துக்குப் பகைவனாகி விடலாம். ஆனால் இறைவனுக்கு அவனே நல்ல மகனாவான். மனதில் உதிப்பதை அப்படியே வெளியில் சொன்னால் தனக்கும் பிறருக்கும் பெரிய கஷ்டமும், ஆபத்தும் கூட உண்டாகலாமே? என்று கேட்கலாம் 'ஆம்' உண்டாகலாம்தான் ஆனால் அப்படித் தனக்கும் பிறருக்கும் கஷ்டத்தையோ, துன்பத்தையோ உண்டாக்கும் நினைப்புகளை ஏன் நினைக்க வேண்டும்? நினைப்பதை நல்லதாய் நியாயமானதாய் தனக்கும் பிறருக்கும் நன்மை பயப்பதாயிருந்தால் அதை அப்படியே கபடமில்லாமல், வஞ்சனையில்லாமல் வெளியில் சொல்லலாமல்லவா? நல்லதையே நினை, நினைப்பதை ஒளிக்காமல் சொல், அதன்படி செய் இது உபாசகனுக்குரிய பண்புகள்

உலகத்தோடு இணைந்து வாழும் போது எத்தனையோ எதிர்ப்புகள், பகைமைகள் எதிர்படத்தான் செய்யும். சிலர் வீணாக அபாண்டம் சொல்வார்கள், வீண்பழி சுமத்துவார்கள் இதற்கெல்லாம் கலங்குவதாயிருந்தால் எக்காரியத்தையும் சாதிக்க முடியாது. ஆகவே உபாசகர்களுக்கு நல்ல சகிப்பு தன்மை இருக்க வேண்டும். அப்போதுதான் இறைநெறியில் தடையின்றி முன்னேற முடியும். எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியான நட்பை, காரிய சாதகத்தை எதிர் பார்க்கமுடியாது. நாமும் எல்லோருக்கும் ஒரேமாதிரியான உதவியை செய்யமுடியாது. உலகில் பல நிலைப்பட்ட மக்களுண்டு. ஒவ்வொருவருக்கும் நம் உதவி ஒவ்வொரு வகையில் தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரிடமிருந்தும் நாம் ஒவ்வொரு நன்மையைத்தான் பெற முடியும். அதனால் பிறரின் நிலைகளை நன்றாக அறிந்து அதற்கு தகுந்தபடிதான் அவர்களிடம் ஒழுகி வரவேண்டும்.

மேற்சொன்ன பண்புகள் காயத்ரீ உபாசகனுக்கு காயத்ரீ மந்திரத்தின் "கோ" என்ற அட்சர அலைக்கழிவுகளால் உண்டாகும். அதனால் வாழ்க்கை செம்மைப்படும்.

- ஓம் சதா சாரீ பவ -

# ஸ்ம்ருதி- 10

**மனிதர்கள் தம் எல்லா இந்திரியங்களையும் தம் வசப்படுத்தி வைக்க வேண்டும். கட்டுப்படாத இந்த இந்திரியங்கள் தலைவனைத் தின்றுவிடக் கூடியவை.**

விளக்கவுரை:

ஆன்மா தன்னை அறிந்து கொள்ள முடியாமல் இருப்பதற்கு காரணம் இந்திரியங்கள் ஈர்த்து வெளியுலகத்தில் செலுத்திக் கொண்டிருப்பதுதான். உண்ணப்பட்ட உணவு உடற் பொருளாக மாறிவிடுவது போல் இந்திரியங்களால் ஈக்கப்படும் ஆன்மா இந்திரிய பொருளாகவே மாறிச் செயல்படுவதால் ஆன்மாவை இந்திரியங்கள் சாப்பிடுகின்றன என்று சொல்லப்படுகின்றன.ஒவ்வொரு இந்திரியமும் ஆன்மாவை தன் வசம் ஈர்க்கும் போது ஆன்மா அந்த இந்திரியத்தின் வடிவாகவே மாறிநிற்கும். எப்போதும் இப்படி ஏதாவதொரு இந்திரியத்தால் ஆன்மா இழக்கப்பட்டு கொண்டேயிருப்பதால் எப்போதுமே அது தன் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளமுடிவதில்லை, அதனால் 'தன்னையறிந்து தலைவனையறிய விரும்புபவன்' இந்திரியங்களின் வழி தான் ஓடாமல் அதனைத் தன் வசப்படுத்த வேண்டும். இந்திரியங்கள் ஆன்மாவின் வசப்பட்டு,ஆன்மாவை இழக்க, உண்ண முடியாமல் அடக்கி நின்றால் ஆன்மா தன்னை உள்ளபடி அறிந்து செயற்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான இந்திரியங்கள் ஐந்து, கர்மயிந்திரியங்கள் ஐந்து ஆக இந்திரியங்கள் பத்து என்பதை அனைவரும் அறிவர். ஞான இந்திரியங்கள் தான் ஆன்மாவை ஈர்ப்பவையன்றி கர்ம இந்திரியங்கள் ஆன்மாவை ஈர்ப்பவையல்லவே என்று பலர் கருதலாம். கண்ணில் ஒன்றை பார்க்கும் போது அதன் வழி ஈடுபட்டு நன்மையோ, தீமையோ அனுபவிப்பது போலவே, கை, கால்களின் நடுக்கம் முதலியவைகளால் துன்பத்தையும், அவைகளின் சரியான நல்ல இயக்கத்தால் இன்பத்தையும் நாம் அனுபவிக்கவில்லையா? வயிற்றில் கோளாறு நமக்கு துன்பம் பயக்கவில்லையா? ஆகவே கர்ம இந்திரியங்களின் இயக்கத்தையும் நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

பொறிகளைக் கட்டுப்படுத்த வேண்டியது இன்றியமையாதது என எல்லா ஆன்றோர்களும் சொல்லத்தான் செய்கிறார்கள். அதற்காகப் பலர் முயற்சி செய்யத்தான் செய்கிறார்கள். ஆனால் வெற்றியடையதான் முடிவதில்லை. பொறிகளை தம்வசமாய்க் கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. மனிதனின் மனதின், சித்தத்தின் இயல்பான சக்தியால் இது முடியக்கூடியதுமல்ல. தெய்வத்தின் அருட்சக்தியின் உதவியில்லாமல் யாருமே இதைச் சாதிக்க முடியாது.

காயத்ரீ மந்திரத்தின் "தே" என்ற எழுத்தால் உருவாகும் அருள் அலைகள் பொறிகளை ஆன்மாவின் வசத்தில் கட்டுப்படுத்த உதவுகின்றன. அதனால் காயத்ரீ உபாசகர்கள் தம்மையறியாமலே தம் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி, தம்மையறியும் பெரிய அறிவைப் பெறுகிறார்கள்.

- ஓம் இந்திரிய சம்பன்னோ பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 11

மனிதர்கள் உள்ளும் புறமும் பவித்ரமானவர்களாய் வசிக்க வேண்டும். இந்த பவித்ர தன்மையால் தான் சந்தோஷம் உண்டாகும்.

விளக்கவுரை:

பண்டிகைகள், விரதங்கள், திருவிழாக்களின் போது உடலைத் தேய்த்து தேய்த்து குளித்து சுத்தமான ஆடைகளையணியும் பக்தர்களில் பலர் தம் உள்ளத்தையும் சுத்தம் செய்யவேண்டுமென்று நினைப்பதேயில்லை. பலர் அன்றுதான் தம் உள்ளத்தில் உறங்கிக்கிடக்கும் ஆசையை, வெறுப்பை, பொறாமையை, கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். அன்றுதான் வீட்டில் சண்டை, சச்சரவு. உடலில் சுத்தமாயிருந்து கடவுளுக்கு தேங்காய், பழங்கள் வைத்து கும்பிட்டுவிட்டால் போதும் என்று இந்த கபோதி பக்தர்கள் நினைக்கிறார்கள். அதனால்தான் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பண்டிகையும், விரதத்தையும் விடாமல் பரிபாலிக்கும் பக்தர்கள் எந்தவித பலனையும் அடையாமல், நோய்நொடிகளிலும் பஞ்சம் பட்டினியாலும் வருந்திக் கொண்டேயிருக்கிறார்கள். வாழ்க்கையில் சந்தோஷம், என்பதை சற்றும் பெறுகிறார்களேயில்லை. உள்ளத்தில் தூய்மையாய்யிருப்பவர்கள் உடல் தூய்மையைப்பற்றி சிந்திக்க வேண்டியதில்லை அல்லவா? என்று கேட்பது சரியில்லை, அழுக்கு நிறைந்து துர்நாற்றமுள்ள இடத்தில் உட்கார்ந்து கொண்டு சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டுமென்று விரும்பினால் இது நடக்கக்கூடிய காரியம்தானா? உடலில் அசுத்தம் இருக்கும் போது, இரத்தத்திலும் அசுத்தாமாயிருக்காதா? அந்த அசுத்த இரத்தம் மூளையில் பாய்ந்தால், அந்த மூளையின் வழி நல்ல எண்ணங்களை தெய்வ சிந்தனைகளை வெளிப்படுத்த முடியுமா? உள்ளத் தூய்மைக்கு உடல் தூய்மை இன்றியமையாதது. உடலில் அழுக்கு பிறந்தவனுக்கு சொறி, சிரங்கு முதலிய சர்ம ரோகங்கள் வருமாதலால் அவன் சந்தோஷமாயிருக்க முடியுமா? உள்ளுறுப்புகளில் அசுத்தமாயிருப்பவர்களுக்கு வயிற்று வலி, அஜீரணம் முதலியவை இருந்து கொண்டேயிருக்குமாதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சந்தோஷமாயிருக்க முடியுமா? உள்ளத்தில் துர்குணங்களை வைத்துக்கொண்டிருப்பவன் அதற்கு தகுந்த சூழ்நிலைகளைத் தான் உருவாக்கி, அதே போன்ற துர்க்குணபிரபாவங்களைத் தான் ஆகர்ஷிப்பானாதலால், அவன் சந்தோஷத்தை எதிர்பார்க்க முடியுமா? அதனால் உடலிலும், உள்ளத்திலும் தூய்மையாயிருப்பவன் தான் உண்மையாக சந்தோஷமாகயிருக்க முடியும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

உடலிலும், உள்ளத்திலும் தூய்மையைக் கடை பிடிக்க மனிதன் சாதாரணமாக விரும்பினாலும் அது எளிதாக சாத்தியமாகிவிடாது. ஆன்மாவைக் கப்பியிருக்கும் அஞ்ஞானமாதி மலங்கள் அதற்கு இடந்தரா அதனால் அஞ்ஞானத்தை அழிக்க வல்ல ஓர் மெய்ஞான சக்தியின் உதவி கொண்டுதான் மனிதன் தன் அகத்தையும், புறத்தையும் தூய்மைப்படுத்தி சந்தோஷத்தைப் பெறமுடியும்.

காயத்ரீ மந்திரத்தின் "வ" அட்சரத்திலெழும் அலை மனிதனில் உள்ளும், புறமும் தூய்மையை அடையும் வழியை உண்டாக்கும் சக்தி கொண்டது. அதனால் காயத்ரீ உபாசகர் தன்னை அறியாமலே தன் உடலிலும் உள்ளத்திலும் தூய்மையைப் பெற்று இகத்திலும் பரத்திலும் சந்தோஷமாய் வாழும் பண்பை அடைவார்கள்.

- ஓம் சந்தோஷவான் பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 12

'மற்றவர்களுக்கு உபயோகமாகக்கூடிய காரியங்களை செய்வது பரமார்த்தமாகும்' என்பது அறிவாளிகள் கருத்து. பிறருக்கு சுகத்தையளிக்கும் விசாரகனின் துன்பங்கள் தானாக அழிந்து விடும்.

விளக்கவுரை:

பலர் பிறருக்கு நன்மை செய்வதாகச் சொல்லிக் கொண்டு, பிறருக்கு உண்மையில் தேவையில்லாத, நன்மையில்லாத பல காரியங்களைச் செய்து அதன் வழி பேரையும், புகழையும் தேட முற்படுகிறார்கள். பசிக்காதவனுக்கு நிறைய உணவை பரிமாறுபவன் என்ன பெறுவான்? வசைமாரியைத்தான் பிரதிபலனாகப் பெறுவான். இத்தகைய உதவிகளுக்கு ஸ்வார்த்தம் என்று பெயர். பிறருக்கு நன்மையைச் செய்து, அதன் வழி தானும் நன்மையைப் பெறுவது அர்த்தம். வியாபாரி தூர இருக்கும் பொருளைக் கொணர்ந்து, பிறருக்குச் சிரமமில்லாமல் பகிர்ந்தளித்து அதன் வழி தனக்கு லாபம் தேடிக்கொள்கின்றான் இது அர்த்தம். தனக்கு எவ்வித நன்மையும் எதிர்பாராமல் பிறருக்கு உதவி செய்வது பரமார்த்தம். இப்படிச் செய்பவர்கள் மிகச்சிலரே. இதுவும் பிறருக்கு உண்மையில் தேவையான உபயோகமான உதவியாய் இருக்க வேண்டும். இப்படிச் செய்பவர்களின் கர்ம வினைகள் - துக்கம் பயக்கவிருக்கும் கர்ம வினைகள் தாமாக அழிந்து போகும். உண்மைச் சுகம் கிடைக்கும். இது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வோம்.

பிறரிடமிருந்து நன்மையை நாடிப்பிறர்க்கு உதவி செய்தால் 'என்ன பிரமாதம் என்னிடமிருந்து அதைப் பெற்றுக் கொண்டு இதைக் கொடுத்தான்' என்று தானே சொல்வார்கள். இதனால் உதவிசெய்யப்பட்டவர்களின் உண்மையான வாழ்த்துக்கள் கிடைக்கா. கைம்மாறு கருதாமல் உதவி செய்தால் 'புண்ணியவான்' இதைச் செய்து கொடுத்தான் என்று உள்ளன்புடன் வாழ்த்துவார்களல்லவா?
இப்பொழுது எழும் அவர்களின் மானசீக வாழ்த்துக்கள் நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிவந்தடையும். அவ்வலைகளின் இலக்கு நாமேயாதலால் இப்படி பல சமயம் பலவழியாக நம்மை வந்தடையும் புண்ணிய வாழ்த்தலைகள் நம்மில் சேரச் சேர நம்மில் நமக்குத் துன்பம் பயக்கக் காத்திருக்கும் தீய சம்ஸ்காரங்கள் அழிக்கப்பட்டுவிடும். நல்லவர்கள் சேர்ந்து வாழுமிடத்தில் தீயவன் இருக்க முடியாதல்லவா? சுத்தம் செய்யும் இடத்தில் அழுக்கு இருக்க முடியாதல்லவா?

இதனால் இறையருள் பெற்றுய்ய விரும்புபவர்கள், தம் தீய வினைகளை அழிப்பதற்கு, சாதகமாக தன்னலம் கருதாமல் பிறருக்கு உண்மையில் தேவையான உதவிகளைச் செய்து வரவேண்டும். ஆனால் எல்லோரும் இந்த நல்லுபதேசங்களைக் கடைப்பிடிக்க முடியாது. 'எனக்கு எந்த நன்மையும் இல்லாமல் நான் ஏன் உதவி செய்ய வேண்டும்? ' என்று தான் உள்ளம் வினவும். ஆகவே இந்த பரமார்த்த பண்பை மேற்கொள்ள வேண்டுமானால் வேறொரு சக்தி நம்மில் அப்பண்பை உண்டாக்கியாக வேண்டும். காயத்ரீ மந்திரத்தின் "ஸ்ய" என்ற அட்சர அலையால் எழும் சூஷ்ம அலைகள் உபாசகரில் இப்பண்பை வளர்க்கும். அதனால் காயத்ரீ உபாசகன், தன்னையறியாமலே பிறருக்கு கைம்மாறு கருதாமல் உதவி செய்யும் பண்புடையவனாகி தனக்குத் துன்பம் பயக்கவிருக்கும் கர்ம சம்ஸ்காரங்களை அழித்துக் கொள்வான். நலம் பெறுவான்.

- ஓம் சம்ஸ்கார ஸித்தோ பவ -

# ஸ்ம்ருதி - 13

அறிவாளி, தன் வாழ்க்கையில் ஒரேவித முன்னேற்றத்தை மேன்மையை மட்டும் நாடி நிற்கக்கூடாது. பலதரப்பட்ட விஷயங்களிலும் முன்னேற்றம் அடைய முயலவேண்டும்.

விளக்கவுரை:

'போகாபவர்க்கம் ஜனனம்' - பலவகைப் போகங்களையும் அனுபவித்த பின் பிறவாப் பேரின்பம் பெறுவதுதான் பிறவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோள். வாழ்க்கை முழுவதும் செல்வத்தை மட்டும் பெற முயற்சித்து, போராடி செல்வத்தை மட்டும் நிறையத் தேட முயற்சிக்கும் ஒருவன் நிம்மதியைப் பெறமுடியுமா? செல்வம் வளர வளர ஆரோக்கியம் குறைந்தால், நோய் வளர்ந்தால், அறிவு கலங்கினால் ஆபத்துக்கள் உண்டானால் செல்வத்தால் மட்டும் அவன் என்ன இன்பத்தை பெறமுடியும்? ஆரோக்கியமும், பலமும், கல்வியறிவும் இருக்கும் ஒருவனுக்கு போதுமான செல்வம் இல்லையானால் நிம்மதியாய் வாழ முடியுமா?

நம் உடலில் எப்படி பல உறுப்புகள் இருக்கின்றனவோ எல்லா உறுப்புகளும் ஆரோக்கியமாய் இருந்தால்தான் எப்படி நிம்மதியாயிருக்க முடியுமோ அப்படி உலக வாழ்விலும் பலவித நலன்களைப் பெற்றால் தான் நிம்மதியாயிருக்க முடியும். ஒரே இன்பத்தை மட்டும் அதிக அளவில் பெற்று விடுவதால் நிம்மதியாய் வாழமுடியாது.

ஆன்மீகத் துறையில் தெய்வப் பாதையில் முன்னேறிப் பெரும் பயன் பெறவிரும்புபவனுக்கு அதற்கான நல்லறிவு வேண்டும். இந்த ஒரு அறிவைப் பெறவே அவன் ஆயுளில் பலநாட்களைச் செலவழிக்க வேண்டும். இந்த அறிவை பெற்றபின் அவ்வறிவின் வழி நின்று பயன் பெறலாமென்றால் கர்மவினையால் ஏதாவது நோய் வந்துவிடலாம். அதிலிருந்து பூர்ணமாக நிவர்த்தி பெற பலநாள் முயலவேண்டும். இதன் பிறகு ஆரோக்கியமடைந்து சாதனையில் இறங்க நினைத்தால் வசதிகளின் குறைவால் சாத்தியமாகாமற் போகும். பிறகு பொருளைத் தேட வேண்டிய பெருமுயற்சியில் நாட்களைச் செலவிட வேண்டி வரும். இந்த முயற்சியில் வெற்றிபெறமுன் பிறவியே முடிந்தாலும் முடிந்து விடலாம். வெற்றி பெறுவதெங்ஙனம்?

பிறவிப் பெரும் பலனைப் பெற விரும்புபவன் நீண்ட ஆயுள், நல்ல ஆரோக்கியம், குறைவற்ற செல்வம், நல்ல ஞானம் இவ்வளவையும் பெற முயற்சித்து வெற்றியடைய வேண்டும். ஆனால் மனிதனின் அற்ப ஆயுளில் இவ்வளவையும் பெறமுடியாது. அப்படியானால் வழிதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ உதவியால் பௌதீக இன்பப் பாதையில் ஒரே சமயம் அனைத்து இன்பங்களையும் பெறுபவன் தான் பிறவிப் பயனைப் பெறும் நெறியில் வெற்றிகாண முடியும். காயத்ரி மந்திரத்தின் தீ ' என்ற சொல்லின் அலை இவ்வனைத்தையும் பெறும் சூழ் நிலையை உருவாக்கும் சக்தி படைத்தது. அதனால் காயத்ரீ உபாசகர்கள் தம் வாழ்க்கையில் பௌதீக சுகமனைத்தையும் ஓரளவில் விரைவில் பெற்று பிறவிப் பயனைப் பெறும் பெருநெறியில் முன்னேறுகிறார்கள்

- ஓம் ஆரோக்கிய ஐஸ்வர்யாயிவ்ருத்திரஸ்து -

# ஸ்ம்ருதி - 14

**இறைவனின் நியாயமான நியமங்களைத் தெரிந்துகொண்டு, அந்நியமாதிகாரியான இறைவன் இருக்கும் உண்மையைப் புரிந்து கொண்டு, தகுந்த முறையில் அவனை உபாசித்து வா!**

விளக்கவுரை:

நுண்ணிய அணு முதல், மிகப் பெரிய அண்டம் வரையுள்ள சகல பொருள்களிலும் ஓர் நியமம், சட்டம் இருக்கின்றது. இந்நியமத்தின் படிதான் சகல பொருள்களும் தோன்றி, நிலைத்து மறைந்து கொண்டிருக்கின்றன. 'நியமமே கடவுள்' என பைபிள் கூறுகின்றது. இப்பிரபஞ்ச நியமத்துக்குட்படாத பொருளேயில்லை. சேதன, அசேதனப் பொருள்கள் எல்லாமே இந்நியமத்துக் உட்பட்டுள்ளதால்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டில் நல்லதொரு நியமம் சட்டம் நடைமுறையில் இருக்கிறதென்றால், அச்சட்டத்தை மீறுபவர்களுக்குத் தண்டனை கொடுப்பவர் யாரோ இருக்கிறார் என்று பொருள், நாட்டில் தண்டனையில்லையென்றால் சட்டமிருக்காது, ஒழுங்குமுறையும், அமைதியும் இருக்காது. 'பயாத்தபதி ஸுர்ய' சூரியன் நியமமாக இயங்குகிறான் என்கிறது உபநிடதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்நியமத்தில் மாறுதலைச் செய்தால் தண்டனை கிடைக்குமென்ற பயத்தாலேயே சூரியன் நியமமாக இயங்கி வருகிறான். இந்த உண்மை சகல பிரபஞ்சப் பொருள்களுக்கும் பொருந்தும்.

பிரபஞ்சத்தில் நியமம் இருப்பதே, அதை நியமித்து நடத்தும், இறைவனிருப்பதற்கான சாட்சியாகும். பிரபஞ்சத்தில் நியமத்தைக் காண்பவன் இறைவனிருப்பதைக் கண்கூடாகக் காணா விட்டாலும் 'இருக்கிறார்' என்பதைத் தெளிவாக அறிந்து கொள்வான். இப்படி அறிந்து கொள்பவன் தானும் தன் அறிவின்மையால், தனக்கென சரியான நியமத்தைப் புரிந்து கொள்ளாததால் நியமத்துக்கு மாறாக நடக்கும் குற்றங்கள் புரிந்து அதன் பயனாய் துக்கமெனும் தண்டனையை அனுபவியாமல் அந்நியமத்தை அறிந்து அதன்படி நடந்து, நியமகர்த்தாவின் அன்புக்குப் பாத்திரமாகி இன்பம் பெற முயற்சிப்பான்.

மனிதன் தன் சொந்த அறிவால், கல்வியறிவால் தன் நியமத்தை அறிந்து கொள்ளவோ அதன்படி ஒழுகி வரவோ முடியாது ஏனெனில் அவனை அறியாமை சூழ்ந்திருக்கின்றது. வேறொரு உதவி மூலம்தான் அவன் அதை அறிந்து கொள்ள முடியும். அவ்வுதவி நியமத்தின் தலைவனாகிய இறைவனாகவே இருக்க வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டுமா? தன் நியமத்தை அறிந்து, அதன்படி தன்னை நடத்துவித்து அருள் செய்யும்படி இறைவனுடன் தொடர்புகொள்வதே உபாசனை.

காயத்ரீ உபாசகன் தான் மேற்கொண்டொழுக வேண்டிய விதிகளை அறிந்து அதன்படி ஒழுகி இறைவனின் அன்புக்கு பாத்திரமானவன். இதற்கு காயத்ரீ மந்திரத்தின் "ம" எழுத்தின் அலை உபாசகனில் அப்பண்பை உண்டாக்குகிறது.

- ஓம் உபாஸகோ பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 15

தன்னில் உதிக்கும் நல்லறிவுதான் தனக்கு உண்மையான வழிகாட்டியென்பதை உணர்ந்து அதைப் பின்பற்றி நட; எப்போதும் யாருடைய வழியையும் கண்மூடித்தனமாக பின்பற்றாதே.

விளக்கவுரை:

நீதி போதனைகள், தர்ம உபதேசங்கள், பெரியோரின் போதனைகள் எல்லாம் எல்லோருக்கும் எக்காலத்திலும் பொருந்தக் கூடியவையாயிருக்காது. ஒருவருக்குப் பொருத்தமான ஒரு முறை மற்றவர்களுக்கு பொருந்தாது, ஒரு காலத்தில் பொருத்தமானது மற்றொரு காலத்துக்குப் பொருந்தாமல் போகும், ஒரு நிலையில் பின்பற்றக் கூடியது வேறொரு நிலையில் பின்பற்றக் கூடாததாகியிருக்கும்.

கொலை செய்வது குற்றம், அர்ஜுனனைக் கொலை செய்யும்படி தூண்டினான் கண்ணன். மறைமுகமாயிருந்து கொல்வது பாபம், ஸ்ரீராமன் வாலியை மறைவிலிருந்து கொன்றான். திருடுவது பெரும்பாபம், ஆழ்வார் வழிப்பறி செய்தார்.

பிறர் பொருளை அபகரிப்பது குற்றம். பாதுஷாவின் பொருளை அபகரித்தார் ராமதாசர், எச்சிலை பகவானுக்கோ, மற்றவர்களுக்கோ கொடுப்பது அடாது, சபரி ஸ்ரீராமனுக்கு எச்சில் படுத்திய பழங்களைக் கொடுத்தார், கண்ணப்ப நாயனார் வாய் நீரால் லிங்கத்துக்கு, காளத்தீஸ்வரருக்கு அபிஷேகம் செய்தார்.

உண்மையில் நாம் எப்படி ஒழுக வேண்டும், எதை பின்பற்ற வேண்டும் என்பதை தவறில்லாதபடி தெரிந்து கொள்ள வேண்டுமானால் சாத்ர ஞானம் பயன்படாது. நமக்குள் விழித்தெழும் அறிவு காட்டும் வழியைத் தான் நாம் பின்பற்ற வேண்டும்.

சரியான வழியைக்காட்டி கொடுக்கும் சத்திய அறிவு, உண்மையறிவு விழித்தெழாத போது சாதாரணமான அறியாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த அறிவின்படி நடந்தால் துன்பமும், பாபமும்தான் சேரும். உண்மையறிவு விழித்தெழுந்தால் தான் நமக்குப் புண்ணியமான நன்மைதரும் வழிகளைக் காட்டி கொடுக்கும். இந்த உண்மையறிவு தானாக மனிதனில் விழித்தெழுந்து விடாது. இதைவிழிப்பிக்க தெய்வசக்தி அறிவைத்தாக்க வேண்டும்.

காயத்ரீ மந்திரத்தின் "ஹ்ரீ" யென்ற எழுத்தால் உண்டாகும் தெய்வ சக்தி அலைகள் உறங்கும் நம் உண்மை அறிவை விழிப்பிக்கச் செய்யும். அதனால் காயத்ரீ உபாசகன் உண்மையறிவின் விளக்கம் பெற்று, அதன் வழி செயல்பட்டு இன்பவாழ்க்கை பெறுவான்

- ஓம் புத்திமான் பவ -

# ஸ்ம்ருதி - 16

மரணத்தைப் பற்றி எப்போதும் நினைவிலிருத்தியபடி. வாழ்க்கையின் மர்மத்தை அறிய முயற்சித்தவாறு உன் குறிகோளின் மார்க்கத்தில் எப்போதும் நட.

விளக்கவுரை:

'ஏன் பிறந்தோம்' என்பது பலர் அறியாத விஷயம், ஏன் பிறந்தோமென்று தெரியாததால் தான் 'என்ன செய்ய வேண்டும் பிறந்த பின்' என்பதும் தெரியாமல் மண்ணை மாமிச பிண்டமாக்கி, மறுபடியும் மண்ணுக்குப் போட்டுவிட்டு போகும் வெறும் பயனற்ற வாழ்க்கையில் பெரும் பாலானவர்கள் இருந்து மறைகிறார்கள். வெறும் கையோடு வந்தது போலவே, வெறும் கையோடு வந்த இடத்திற்குத் திரும்பிப்போய் விடுகின்றார்கள். இத்தகையோர் எல்லாம் அரியதொரு பெரும் பயன் பெறுவதற்காகக் கிடைக்கப்பெற்ற பிறவியை எவ்வித பயனும் பெறாதபடியே கழித்து போகிறவர்களாகிவிடுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? நன்கு அறிந்த உண்மையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளாமைதான் இதற்கு காரணம். அது மரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த ஒவ்வொரு உயிரும் ஒரு நாளைக்கு இறந்து போகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். ஆனால் இதைப்பற்றி சிந்திப்பார்தான் இல்லை. 'இறந்து போகும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். இவைகளால் நமக்கேதாவது பயன் உண்டா? என்பதை ஆராய்ந்து 'பிறவியெதற்காக எடுத்தோம்' என்பதை அறிய முயற்சித்து அதற்கான வழியை மேற்கொள்ள முயற்சிப்பார்கள். ஆனால் இந்த உண்மையறிவுக்கு அடிப்படையான மரணத்தைப் பற்றி யாருமே சிந்திப்பதில்லை. அதனால்தான் பயனுள்ள வாழ்க்கையை எவரும் மேற்கொள்வதுமில்லை. எடுத்த பிறவியால் என்ன அரிய பலன்களை பெறலாமோ அந்தப் பலன்களைப் பெறும் வாழ்க்கையை நடத்த வேண்டுமானால் மரணத்தைப் பற்றிய சிந்தனை எப்போதும் இருந்து வரவேண்டும். அந்த சிந்தனையிருந்தால் பிறவியின் குறிகோள் இன்னதெனத் தெரிந்து கொள்ளும் முயற்சியேற்படும் அதற்கான பலனுள்ள வாழ்கையை நடத்த மனம் துணியும்.

எத்தனைதான் படித்தாலும், கேட்டாலும் மனிதர்க்கு இந்த நினைப்பு, சிந்தனை இருப்பதேயில்லை. காரணம் அஞ்ஞானம், அஞ்ஞானம் அழியப்பெறுபவர்களுக்குத்தான் மரண சிந்தனை இருக்கும். வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வழியும் கிடைக்கும். தானாக கல்வி கேள்விகளால் மட்டும் அஞ்ஞானம் அழிந்து, மெஞ்ஞானம் தோன்றாது. இதற்கு தெய்வ உதவி இருந்தால் தான் முடியும்.

காயத்ரீ உபாசகர், பராசக்தியின் பேரருளால் அஞ்ஞானம் விலகப்பெற்று, மரண சிந்தனையை மேற்கொண்டு, பிறவிப் பெரும் பயனை பெறும் நெறியில் நடந்து பேரின்ப பெருவாழ்வைப் பெறுவார். காயத்ரீ மந்திரத்தின் "தி" அட்சர அலைகள் சாதகரில் அப்பண்புகளை ஏற்படுத்தும்.

- ஓம் ஞானவான் பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 17

எந்த தர்மம் இப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக உள்ளதோ அந்த தர்மத்தை நீ கடைப்பிடி; இதை அசட்டை செய்யாதே ஏனென்றால் இது ஒன்றுதான் உன் வழிக்கு உண்மையான உறுதுணையாயிருக்கவல்லது.

விளக்கவுரை:

தெருவில் நடக்கும் ஒருவன் எதிர்ப்படும் மற்றவனை அடித்துத் துன்புறுத்தலாம்.எல்லோரும் இப்படிச் செய்வதாயின் உலகில் மனிதன் வாழ முடியுமா? காட்டு மிருகங்கள் நகரங்களுக்கு படையெடுத்து மக்களைக் கொன்று குவிக்கலாம். இப்படி நடந்தால் நகரங்கள் இருக்க முடியுமா? கடல் கொந்தளித்து அருகிலுள்ள வீடுகளையும், ஊர்களையும், கபளீகரம் செய்து கொள்ளலாம். இப்படியானால் மண்ணுலகில் மனிதர் மட்டுமல்ல எந்த உயிரும் வாழ முடியாது. உலகில் கடல் பகுதி தான் பெரிது. சூரியன் ஒரேயடியாய் தன் வெப்பத்தைக் கக்குவதன் மூலம் உலகை அரை விநாடியில் சாம்பலாகிவிடலாம், உலகம் மிஞ்சுமா?

மேற்சொன்னவை போன்றனவும், மற்றும் இவைபோன்றனவும், உலகை அழித்துவிடாமல் இருக்க எது காரணமாயிருக்கின்றதோ அதுவே தர்மம். தர்மத்துக்கு கட்டுப்பட்டுத்தான் கடல் கொந்தளிக்காமலிருக்கின்றது, காட்டு மிருகம் நாட்டில் புகாமலிருக்கின்றது. விஷபாம்புகள் வீடுகளில் இல்லாமலிருக்கின்றன. மனிதர் மனிதரை இம்சிக்காமலிருக்கிறார்கள்.

நாம் நிம்மதியாய் வாழ்ந்து, நம் குறிகோளையடைய, நம்மை கடல் கொள்ளக் கூடாது. துஷ்ட மிருகங்கள் இம்சிக்கக் கூடாது. வெப்பம், பனி, மழை, காற்றுக்கள் துன்பம் செய்யக் கூடாது என்று விரும்புகிறோமல்லவா? இவ்விருப்பத்தின் மறைமுகக் கருத்தென்ன? நம்மைச் சுற்றியிருக்குமெல்லாமும் அதனதன் தர்மத்துக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்பதுதானே? அப்படியானால் அது நிறைவேற வேண்டுமானால் நாம் மட்டும் தர்மத்தை மீறி நடக்கலாமா? நாம் தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் வரைதான் பிறவும் நம் வரையிலாவது தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும். தெருவில் செல்லும் ஒருவனை நாம் வீணாக அடித்தால் அவனும் நம்மை அடிக்கத்தான் செய்வான். காட்டில் நிம்மதியாய் வாழும் ஒரு ஜீவனை நாம் துன்புறுத்தினால் அது நம்மைத் துன்புறுத்தத்தான் செய்யும். அதனால் பிறரிடம் எதிர்பார்க்கும் அத்தர்மத்துக்கு நாமும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

இந்த உலகில் கூறிய அதே தத்துவம் நாம் சென்று வரும் சூசஷ்ம உலகங்களுக்கும் பொருந்தும். அங்கும் நாம் தர்மத்தை நழுவ விட்டால் அவ்வுலகமும் நமக்குத் துன்பத்தைப் பயப்பதாக ஆகிவிடும். மேலுலகங்களிலும் நாம் இன்பமாய், சுகமாய் இருப்பதற்கு தர்ம பரிபாஷையொன்றே உறுதுணைகளாயிருக்கும். அதனால் நாம் இன்ப, தர்மவிதிகளையறிந்து அவைகளை நம் வாழ்க்கையில் கொண்டு பின்பற்றி வாழ முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் ஈருலகங்களிலும் நிம்மதியாய், இன்பமாய் இருக்க முடியும்.

தர்மவானாக இருக்க வேண்டுமென்று விரும்பினால், முயற்சித்தால் மட்டும் போதாது, அதை நிறைவேற்றும், பரிபாலிக்கும் திறமை அறியாமையில் உழலும் மனிதனின் இயற்கையில் இல்லை. அதனால் தெய்வ சகாயத்தால் தான் மனிதன் இதை பரிபாலிக்க முடியும்.

காயத்ரீ மந்திரத்தின் "யோ" என்ற அட்சர அலைக்கழிவு மனிதனில் தர்மபரிபாலன ஆற்றலை உண்டாக்குகிறது. காயத்ரீ உபாசகன் தர்மபரிபாலகனாய் இகத்திலும் பரத்திலும் இன்பமாய் வாழ்வான்.

- ஓம் தர்மவான் பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 18

கவலைகளிலிருந்து யோசனை தூரம் விலகியிரு, அவை மனிதரின் பகைமைகள், பல ஒன்று சேர்ந்து சமயம் பார்த்து மனிதனை அழித்து விடும்.

விளக்கவுரை:

'சிதா தகதி நிர்ஜீவம், சிந்தா தஹதிஜீவிதம்' - சிதை (பிணத்தைச் சுடும் நெருப்பு) உயிரில்லாத உடலைத்தான் எரிக்கும், ஆனால் சிந்தனை - கவலை, உயிருள்ள உடலையே எரித்துவிடும் என்பது ஆன்றோரின் அனுபவம்

ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் கர்ம பலனாகப் பலவகைத் துன்பங்கள், ஆபத்துக்கள், கெட்ட சூழ் நிலைகள் வரத்தான் செய்யும். துன்பம் வந்தழைக்கும் போது, மனிதன் தன்னில் விழிப்பித்து அனுபவிக்கும் உணர்ச்சி துன்பம் - கவலை. துன்பச் சூழ் நிலைகளின் போது இவ்வுணர்ச்சிக்கு இடம் கொடுப்பவர்கள், அதாவது கவலைப்படுபவர்கள் எளிதில் அதிலிருந்து மீளமாட்டார்கள் அதற்குப் பதிலாக மேலும் மேலும் அத்துன்பத்தை ஒன்றுக்குப் பத்தாக வளர்ந்து, மீளாதுன்பத்துக்கு ஆளாகி விடுவார்கள் 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது இதனால் தான் துன்பத்தை நினைப்பவன் அதை தன்னிலேயே குடியிருக்கச் செய்கிறானேயன்றி விலக்குகிறான் இல்லை. 'நல்லதும், கெட்டதும் எப்போதும் தனியாக வருவதில்லை. தன் துணைவர்களுடனேயே வரும்'' என யோக நூல் கூறுகிறது. நன்மைகளை நினைப்பவன் நன்மைகளை வரவழைக்கிறானாகையால் ஒன்றன்பின் ஒன்றாக பலநன்மைகள் அவனை வந்தடைகின்றன. தீமையைச் சிந்திப்பவன் தீமைகளுக்கு வரவேற்புக் கொடுக்கின்றான் ஆதலால் பல தீமைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவனை வந்தடைகின்றன. துன்பம் உறும் போது, அதை விலக்க அதிலிருந்து விடுபட ஒரே வழிதானுண்டு. அத்துன்பத்தைப்பற்றிச் சிறிதும் சிந்தியாமல் இருப்பதுதான். அதற்கு மாறாக நன்மையைப்பற்றிச் சிந்திப்பது அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்குவதற்கான அரிய உபாயமாகும். ஆனால் துன்பம் வந்த நிலையில் இவ் உபதேசத்தைப் பெரும்பாலானவர்கள் பின்பற்ற முடியாது. எவ்வளவுதான் துன்பத்தை மறக்க முயற்சி செய்தாலும் அதுவே அடுத்தடுத்து மனதில் உதித்துத் துன்புறுத்திக் கொண்டிருக்கும். இதற்குக் காரணம் 'இதை மறந்தால் இது விலகி விடும்' என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளாததும், முன்பு துன்பம் வரக் கூடாதென எதிர்பார்த்திருந்ததுமாகும்.

மண்ணுலகில் பிறந்த எல்லோருக்கும் ஏதாவதொரு வகையில் துன்பம் வரத்தான் செய்யும். நாம் அதற்கு விதிவிலக்கல்ல, என்பதை எப்போது அறிவு நிலையில் நினைவு கூர்ந்து கொண்டிருக்க வேண்டும். துன்பம் வந்த பின் அதிலிருந்து மீளும் வழியை யோசித்து முடிவுகட்ட முடியாதாகையால் அதற்கு முன்பே தன்னைத் துன்பத்திலிருந்து மீட்கவல்லதோர் தெய்வத்தின் உதவியை எப்போதும் பெற்று வைத்திருக்க வேண்டும். தெய்வ உதிவயில்லாமல் யாரும் தம் சொந்த சக்தியால் அடுக்கும் துன்பங்களிலிருந்து மீள முடியாது. காயத்ரீ மந்திரத்தின் எழுத்தாகிய "யோ" என்ற இரண்டாவது எழுத்தால் விழிப்படையும் அலைகள், எவ்வித துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் சக்தியைக் கொடுத்து அவைகளிலிருந்து மீள்வதற்கான ஆற்றலை உண்டாக்குவதன்றி அதுவே மறைமுகமாய் இதற்காக அவனுக்கு உதவி செய்கிறது.

இதனால் காயத்ரீ உபாசகர்கள் துன்பச் சூழலில் சிக்குண்டு அழிந்து போய் விடாமல் காப்பாற்றப்படுவர் !!!

- ஓம் அவ்வ்யஸனொ பவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ம்ருதி - 19

எம்முடைய இந்த வார்த்தையைக் கேள்! எப்போதும் விழிப்புடனிரு; ஏனென்றால் தூங்குபவனை பகைவன் எளிதில் பற்றித் துன்புறுத்தி விடமுடியும்

விளக்கவுரை:

உணவு வகைகளில் எப்போதும் எச்சரிக்கையாயில்லாதவர்களை நோய்கள் எளிதில் பற்றிக் கொள்ளும். வீட்டை ஜாக்கிரதையாக மூடி வைக்காவிட்டால், திருடன் எளிதில் புகுந்து விடுவான். வெளியில் செல்லும் போது பணத்தை ஜாக்கிரதையாய் கண்காணித்திருக்காவிட்டால் கொள்ளையன் எளிதில் கொள்ளை கொண்டு போய் விடுவான். வழியில் நடந்து செல்லும் போது எச்சரிக்கையாய் இல்லாவிட்டால் வண்டிகளினிடையில் சிக்குண்டு, நசுங்கி விடுவோம். பௌதீக வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் எச்சரிக்கை பாதுகாப்பு பத்திரம் தேவைப்படுகின்றது.

பௌதிக நிலைக்கே இத்தகைய விழிப்பு நிலை தேவையானால் தெய்வீக நிலைக்கு எவ்வளவு தேவையென்பதைச் சொல்லவும் வேண்டுமா? பௌதிகத்தில் நம்மைத் தாக்கும் ஆபத்துகளை நாம் காணமுடியும், ஆனால் சூக்ஷ்மமாக நம்மைத்தாக்கும் மாயையின் வெளிப்பாடுகளான காம குரோத மாதி துர்க்குணங்கள் நம்மை பற்றி வருவதை நாம் எவ்வகையிலும் கண்டு கொள்ள முடியாது. நமக்குத் தெரியாமலே அவை நம்மைப் பற்றி, நம்மில் உருவாகி வளர்ந்து கொண்டிருக்கும், தெய்வத்தன்மையை சீர்குலைத்து நம்மை அஞ்ஞானப் படுகுழியில் ஆழ்த்தி விடும். 'கோபப்பட மாட்டேன்' என்று உறுதி பூண்டிருக்கலாம், ஆனால் கோபத்தை தூண்டும் ஓர் சூழ்நிலை உருவாகும் போது நம் உறுதியை மறந்து கோபத்துக்கு உள்ளாகி விடுவோம். தெய்வ உபாசனையின் பயனை அனுபவிக்க வேண்டுமானால், தெய்வம் புரியும் அருளையேற்கும் பயனடைய வேண்டுமானால் நாம் எப்போதும் காம குரோதாதி துர்குணங்களுக்கு உள்ளாகாமல் இருந்து வர வேண்டும். என்றாவது இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்குணங்களுக்கு உள்ளானால் அன்று வரை நம்மில் வளர்ந்து வந்த அருட் சக்தி பாழாகி விடும். ஆகையால் தெய்வ அருளைப் பெற்றுப் பயனடைய விரும்புபவன் எப்போதுமே தீய உணர்ச்சிகளுக்கு உள்ளாகாமல் எச்சரிக்கையுடன் விழிப்புடன் இருந்து வரவேண்டும்.

மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும் உறுதிகொண்டாலும், கட்டிக் காக்க முயன்றாலும் தீய சக்திகள் அவனுட் புகுவதை அவன் அறிந்து தடுத்து நிறுத்தி விடமுடியாது. ஏனெனில் மாயை மனிதனால் எளிதாகத் தடை செய்யப்படக் கூடியதல்ல. அது மனிதனின் சாதாரண அறிவைவிடப் பலம் வாய்ந்தது. அதனால் தீய சக்திகளை தன்னுட் புகவிடாமல் காப்பாற்றி, அதனால் தெய்வ அருளைப் பெற்று உய்ய விரும்புபவன், ஓர் தெய்வ சக்தியின் உதவியால்தான் இதில் வெற்றி காண முடியும்

காயத்ரீ மந்திரத்தின் "ந" எழுத்தால் எழும் அலைக்கழிவு தீய சக்திகளைத் தடுக்கும் வல்லமை கொண்டதாகையால், காயத்ரீ உபாசகன் தன்னில் தீய சக்திகளை புகவிடாமல் காத்து, தெய்வ அருளைப் பயன்படுத்தி நலம் பெறுவான்.

- ஓம் தத்குண சம்பன்னோ பவ -

# ஸ்ம்ருதி - 20

இயற்கையாகவே உதாரமாயிரு; எப்போதும் உதாரமில்லாமல் இருக்காதே; உதார நோக்குடனேயே எதையும் விசாரி, இப்படிச் செய்தால் சித்தம் சுத்தியாகும்.

விளக்கவுரை:

நான்தான் பெரிய அறிவாளி, என்னைவிட மேலான அறிவுபடைத்தவன் யாரும் இருக்க முடியாது; நான் செய்வதுதான் சரியானது, நீதியானது, மற்றவர்கள் செய்வதெல்லாம் சரியில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியில்லை, தான் படித்ததுதான் படிப்பு, மற்றவர்கள் படித்தெல்லாம் சரியான படிப்பல்ல என்பவை போன்று கருதுவது அனுதாரம், உதாரமில்லாமை. தான் மட்டும் சவுக்யமாயிருக்க வேண்டும். மற்றவர்கள் என்னகஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று கருதுவதும் உதாரமில்லாமை இன்றைய மனிதர்களில் பெரும்பாலோர் தம் நலத்துக்காகப் பிறருக்குக் கஷ்டங்களையும், ஆபத்துக்களையும் உண்டாக்குவதற்குக் கூட பின்வாங்குவதில்லை பிறர் துன்பப்படுவதைக் கண்டு சந்தோஷமடையும் உத்தமர்களும் இன்று நிறைய இருக்கிறார்கள். பிறருக்கு துன்பத்தை உண்டாக்குவதையே தம்பிறவிப்பயனாக கருதும் பெரியோர்கள் பலரும் இன்று இவ்வுலகில் இருக்கிறார்கள். இவர்களின் உள்ளத்துக்குள் நுழைந்து பார்த்தால் பல வருடங்கள் முயன்றாலும் சுத்தம் செய்யப்பட முடியாத அளவுக்கு அழுக்கு படிந்திருக்கும். வெளிப்பார்வைக்கு இவர்கள் ஏதோ நல்ல வாழ்க்கை நடத்துவது போல் தெரியலாம். ஆனால் நரகமென்றொன்றிருந்தால் அது இவர்களின் உள்ளத்தில் தான் இருக்கிறதென்று சொல்லும்படி இவர்கள் வாழ்க்கை துன்பமே வடிவாக இருக்கும். உண்மையான இன்பானுபவம் எத்தகையதென்பதை இவர்கள் அறியவே முடியாது. அற்ப, துன்பம் கலந்த இன்பத்தைத்தான் முடிந்த இன்பமாக இவர்கள் கருதியிருப்பார்கள். இவர்களின் வாழ்க்கையில் இன்பம் கடுகளவானால் துன்பம் கடலளவாயிருந்து வரும்.

சித்தத்தில் அழுக்குப்படிந்த இவர்கள் தெய்வ அருள், சுக வாழ்க்கை, அமைதி, நிம்மதி என்பவைகளை என்றுமே பெற முடியாது. மிருகங்களுக்கிருக்கும் நிம்மதி கூட இவர்களுக்கிருக்காது. அதனால் தெய்வ அருள் பெற்று, இக, பர வாழ்க்கை இரண்டிலும் நிலையான இன்பத்தைப் பெற விரும்புபவர்கள் தம்மை போல் பிறரையும் நேசிக்கும் உதார குணத்தை இயற்கையாகவே கொண்டவர்களாயிருக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் மட்டும் உதார குணமுடையவர்களாயிருந்து, மற்ற சமயங்களில் அதற்கு மாறுபட்டவர்களாய் இருக்கக்கூடாது. உதாரகுணம் அவர்களின் இயல்பாக ஆகிவிட வேண்டும். எந்த சமயத்திலும், எந்த நிலையிலும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மாறாக நடக்க முடியாதவர்களாக ஆகிவிட வேண்டும். அப்போதுதான் சித்தம் சுத்தமாகும். சுத்தமான சித்தத்தில் தான் இறையருள் புகமுடியும்.

அறியாமையில் ஆழ்ந்திருக்கும் மனிதன் இவ்வளவு தயை உள்ளம் கொண்ட இயற்கை உதாரவானாகத் தானேயாகிவிட முடியாது. அந்த நிலையில் அவனை அமைக்க, அவனுக்குத் தெய்வ அருள் கூட வேண்டும். காயத்ரீ மந்திரத்தின் "ப்ர" என்ற எழுத்தால் எழும் அலைகள் மனிதனை இயற்கை உதாரகுணம் படைத்தவனாக ஆக்கிவிடும்.

காயத்ரீ உபாசகர்கள் இயற்கையில் உதாரகுணம் படைத்தவர்களாகி, சித்தமலம் முழுதும் அகலப் பெற்று, சிவமயமாகி, இக பரவாழ்க்கைகளில் பேரின்பததைப் பெற்றுய்வார்கள்.

- ஓம் சுபம் பவது -

# ஸ்ம்ருதி - 21

ஆத்மாவைக் கண்டு, ஆத்ம கௌரவத்தைத் தெரிந்து கொள், அதைத் தெரிந்து, ஆத்மாவை முழுமுன்னேற்றத்தின் பாதையில் நடத்திச்செல்.

விளக்கவுரை:

உடலின் அழகு, பலம், செல்வ நிறைவு, நிறைந்த கல்வி, உயர் குலப் பிறப்பு, கலைத்திறன் முதலியவை தாம் மனிதனுக்குப் பெருமைதரக் கூடியவை என்பது சாதாரண மக்களின் பொதுக் கருத்து. இவைகளையுடையவர்களை இவைகள் இல்லாதவர்கள் பெருமைக் குரியவர்களாகக் கருதலாம். பலமில்லாதவன் பலமுள்ளவனைப் பெரியவனாக, மதிப்பிற்குரியவனாக நினைக்கலாம். கல்வியில்லாதவன் கல்விமானை பெருமைக்குரியவனாகக் கருதலாம். தாழ்குலத்தவன் உயர்குலத்தவனை பாக்கியசாலியாக நினைக்கலாம். இரு பணக்காரர்கள், இரு பல சாலிகள், இரு உயர் குலத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கொருவரை தனிச் சிறப்பு உடையவர்களாகக் கருதமாட்டார்கள்.

ஆயிரக்கணக்கான மக்களால் போற்றுவதற் குரித்தானவன் தன்னைத் தன் வரை சாதாரணமானவனாகவே கருதலாம். பெரிய பணக்காரன், தன் நிம்மதியில்லாத வாழ்க்கையைக் கண்டு, நிம்மதியாய் வாழும் ஓர் ஏழையைத் தன்னைவிடச் சிறந்த பாக்கியவானாகக் கருதலாம். அடிக்கடி நோய்வாய்ப்படும் ஒரு பலசாலி எப்போதும் நோய்யில்லாமல் ஆரோக்கியமாக வாழும் ஒரு மெலிந்தவனை பெரிய பாக்கியசாலியாகக் கருதலாம்.

மனிதன் பெறும் உலகப் பேறுகள் எவையும் அவன் வரை அவனுக்கு பெருமையையளிக்கா. தனிமனிதனுக்கு நிம்மதியையும், திருப்தியையும் அளிக்கவல்லது அவனவன் தன்னை தன் ஆத்மாவை அறிவதாலெழும் இன்பமே. தான் இறைவன் இனத்தை சேர்ந்த, ஞான இன்ப வடிவினன் என்றறியும் போது அவன் அனுபவிக்கும் ஆனந்தத்தை உலகில் எதைப் பெறுவதானாலும் அவன் அடையமுடியாது. அதனால் உண்மையில் நிகரற்ற, சிறந்த, மதிப்பை ஒருவனுக்கு உண்டாக்கவல்லது ஆன்ம ஞானமேயாகும். 'தன்னை அறிவது' தான் ஒருவனுக்கு உண்மையான, நிலையான இன்பத்தையும் தன் மதிப்பையும் தருவதாகும்.

தன்னை அறிந்த பின், இன்னும் முன்னேறி, தன்னைக் கவர்ந்துள்ள அழுக்குகளை நீக்கி, இறைவனின் பேரருளைப் பெறும் பெரு நெறியில் வேகமாய் முன்னேற முயல வேண்டும்.

சாதாரணமாக மனிதன் தன் சொந்த முயற்சியால், ஆற்றலால் உடைமைகளால் தன்னையறியும் பேரறிவைப் பெற முடியாது. இதற்கு மறைமுகத் தெய்வ உதவி அவனுக்குத் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரீ உபாசகன், காயத்ரி மந்திரத்தின் "சோத" எனும் மந்த்ர அலைகளால் எழும பராசக்தியின் பேரருளால் தன்னையறிந்து முன்னேறி தலைவனையறியும் அறிவு நெறியில் நடந்து, பிரபஞ்சத்தில் வேறெதனாலும் அடையமுடியாத பேரின்பத்தைப் பெற்றுப் பெருமை கொள்கிறான்.

- ஓம் சாந்திர் பவது -

# ஸ்ம்ருதி - 22

**ஒரு தந்தை, தன் பின்வாரிசான மகனிடம் வாழ்க்கையை ஒப்புவித்துவிட்டு நிம்மதியாய்த் தன் நாட்களை கழிக்க வேண்டும். தந்தையைக் காப்பாற்றாத தனயன் பாவியாவது போலவே தனயனிடம் வாழ்க்கையை ஒப்படைக்காத தந்தையும் பாவியாவார்.**

விளக்கவுரை:

மனிதன் வாழும் சில நாட்களில் அவன் பல நிலைகளைப் படிப்படியாய் கடந்து செல்கிறான். பச்சிளங் குழந்தையாகி, பாலகனாகி, சிறுவனாகி, வாலிபனாகி, இல்லறத்தானாகி, தந்தையாகி, தாத்தாவாகிறான். இந்த ஒவ்வொரு படியும் அவன் உடல் நிலை, மனநிலைகளில் மாறுதல் உண்டாகி அவன் பரிணாமத்தில் மாறுதல் உண்டாகிறது. சிறுவயதில் நல்ல முறையில் வளராதவன் அடுத்து வரும் வாலிப இல்லற தந்தைப் பருவங்களை நல்ல முறையில், பயன்தரும் முறையில், பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஒவ்வொரு படியிலும் அவன் பிற்கால வாழ்க்கையின் அவன் பரிணாமத்தின் அறிகுறிகள் காணப்படும். இந்த பருவங்களையெல்லாம் நல்ல முறையில் கழிக்காதவனின் பிறவி பயனுடையதாயிருக்காது. அவன் பரிணாமம் முன்னேறாமல் பின்னடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிக பருவம் கிட்டியவுடன் அடுத்து, தன் குடும்ப நிர்வாகத்தை தன் வாரிசான பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு மிகுதியிருக்கும் தன் வாழ்நாட்களை பயனுடைய நாட்களாக ஆக்கிக் கொள்ள, பிறவிப் பயனைப் பெறும் நல்ல நாட்களாக, நிம்மதியாய், கவலையில்லாமல், பக்தி யோகம், தவங்களில் ஈடுபடும் நாட்களாகக் கழிக்க முற்படவேண்டும். வியாபாரம் உத்தியோகம், குடும்பத்தைப் பேணும் பொறுப்புகளை வகித்திருக்கும் வரை, பக்தியில் நிம்மதியாய் ஈடுபட முடியாது. சிந்தனைகள் பல மனதில் இருந்து கொண்டேயிருக்கும். பல விஷயங்களில் மனதை ஈடுப்படுத்தியாக வேண்டிய நிலையிருந்து வரும். காலமெல்லாம் இப்படியிருந்தால் பிறவிப் பெரும்பயனைப் பெறும் வழியில் ஈடுபடுவதுதான் எப்போது?

இந்த உண்மையை மனதிற் கொண்டுதான் மனிதவாழ்க்கையை நான்கு ஆச்சிரமங்களாக ப்ரம்மச்சர்ய க்ருஹஸ்த - வானம் பிரஸ்த - சந்நியாச - என பெரியோர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். மனிதன் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு முதலான நான்கையும் இந்நான்கு ஆஸ்ரமங்களில் மனிதன் பெறுகிறான். அறத்தை பிரம்மசர்யத்திலும், பொருளை கிருஹஸ்த தர்மத்திலும், இன்பத்தை வானப்ரஸ்தத்திலும், வீட்டை சந்யாசத்திலும் பெற வேண்டும்.

சந்யாசம் என்றால் வீட்டை விட்டு, காஷாயம் தரித்துக், கொண்டு ஒடி விடுவதென்று பொருளல்ல. குடும்பத்திலும், உலகத்திலும் இருக்கும் பற்றைத் துறப்பது என்றே பொருள். இப்படித் துறக்க வேண்டுமானால் இதுவரை தான் நிர்வகித்து வந்த குடும்பபாரம், வியாபாரம், பொருள் தேடும் முறைகளைத் தன் வாரிசுக்கு ஒப்படைத்து விட்டு, அவைகளைப் பற்றிச் சிறிதும் கவலையில்லால், தன் சாதனையில் முழு மனதும் கொண்டு ஈடுபட்டு வர வேண்டும்.

இப்படிச் செய்ய வேண்டுமானால் ஒரு விஷயம் சரியா அமைய வேண்டும். யாருக்கு நாம் பொறுப்பை ஒப்படைக்கின்றோமோ, அவர் அப்பொறுப்பைச் சரியான முறையில் பரிபாலிப்பவராகவும் நமக்கு வேண்டிய உணவு, உடைவாதிகளைக கவனித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்பவனாகவும் இருக்க வேண்டும். அதாவது சத்புத்திரனாக இருக்க வேண்டும். ஆனால் எல்லா தந்தையர்களும் தம்புத்திரர் இப்படி நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

தெய்வத்தின் உதவியும் அருளும் இருந்தால் தான் ஒருவருக்கு நல்ல மனைவி, சத்புத்திரப்பேறு உண்டாகும். அப்படி உண்டாகப் பெற்றவரே தம் முதுமைக் காலத்தை புத்திரரின் பொறுப்பிலிருந்து செவ்வனே பரிபாலித்து வரமுடியும்.

காயத்ரீ மந்திரத்தின் "யா" என்ற அட்சரத்தால் விழிப்படையும் தெய்வசக்தி மனிதனுக்கு சத்புத்திரப் பேற்றை உண்டாக்குகிறது. அதனால் காயத்ரீ உபாசகர்கள் பயமில்லாமல் தம் பிற்காலப் பொறுப்பைத் தம் வாரிசுகளிடம் ஒப்படைத்து, தம் மிகுதி நாட்களை நிம்மதியாய், பிறவிப் பயனைப் பெறும் முயற்சியுடன் கழித்து, இன்பவாழ்க்கை பெறுவார்கள்.

- ஓம் சுபமஸ்து -

# ஸ்ம்ருதி - 23

ஒவ்வொருவரும் தன்னிடம், பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவோரோ, எதிர்பார்ப்போரோ அப்படி பிறரிடமும் கொள்ள வேண்டும். தாழ்மை, பெருமை, நன்றி, உண்மை இவைகளை யாரும் யாரிடமும் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டியது.

விளக்கவுரை:

இங்கு கூறப்பட்ட நான்கு பண்புகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் மனிதரெல்லாம் உண்மையான சகோதர பாவனையுடன் ஒழுகி மண்ணுலகை விண்ணுலகாக ஆக்கி இன்பமாக வாழத் தேவையானவையென்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். தாழ்மையால் பிறரை வசப்படுத்தும் தன்மையும், பெருமையால் குற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்காமல் இருக்கச் செய்யக்கூடிய வாய்ப்பையும், நன்றியால் தேவையான சமயத்தில் தேவையான உதவியை பெறும் சூழ்நிலையையும், உண்மையால் தன்பால் எப்போதும் எதற்காகவும் வஞ்சனை செய்யப்படாத பெருநிலையையும் மனிதர் பெறலாமென்பதை அறிந்து கொள்ளலாம். மண்ணுலக இன்பத்துக்குத் தேவயையான பண்புகள் இவையே.

இந்நான்கு பண்புகளை மேற்கொண்டு பிறரிடம் நடந்து கொள்ளலாமென்று சாதாரண மனிதன் விரும்பினாலும், முயன்றாலும், இயற்கையில் அறியாமையில் ஆழ்ந்திருக்கும் மனிதனால் இது நடவாத காரியம். இதில் வெற்றிபெற அவனுக்கு ஓர் தெய்வ சக்தியின் உதவி தேவை.

காயத்ரீ உபாசனையின் 'த்' எனும் எழுத்தலையால் யெழும் சக்தி மனிதனை இந்நிலையில் ஒழுகப் பண்படுத்துகிறது. அதனால் காயத்ரீ உபாசகன் இந்நான்கு பண்புகளுடன் பிறரிடம் ஒழுகி, உலக வாழ்வை இன்பமாக கழிக்க முடியும்

- சுபமஸ்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபநிஷத்

மறைகள், வேதங்கள் நான்கு என்பதை நீர் அறிவீர். அவை ரிக் வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வண வேதம் என்பவை. வேதங்களின் பொருளை விரிவுப்படுத்தி விளக்க ப்ராம்மணங்கள் என்ற நூல்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டன. அவைகளில் பல இப்போது கிடைப்பதில்லை. சிலவே கிடைக்கின்றன. அதர்வண வேதத்துக்கு இப்போது 'கோபத ப்ராஹ்மணம்' என்ற ஒன்று தான் கிடைக்கிறது. இதன் 31வது முதல் 38வது வரையான 8 காண்டங்கள் 'காயத்ரீ உப நிஷத்' எனப்படுகிறது. மைத்ரேயர், மௌதக்லயர் இருவரும் சம்பாஷிப்பது போல காயத்ரீயின் அரிய இரகசியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இந்த உபநிஷத்தில் பிரம்ம வித்யா, பதார்த்த வித்யா சம்பந்தமான பல இரகசியங்கள் உள்ளன. அந்த அரிய உபநிஷத்தையே உமக்குக் கற்பித்து வரப் போகிறோம்.

- கண்ணைய யோகி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபநிஷத்

காண்டம் - 01

ஏகாதச - பதினொரு அஷர சித்தியடைந்த மௌத்கல்யரின் பக்கம் ஒரு நாள் எப்போதும் சிரித்த முகத்துடனிருப்பவரான மைத்ரேய முனிவர் வந்தார்.

வந்த மைத்ரேயர் மௌத்கல்யாரைப் பார்த்து "ஐயா ப்ரம்மசாரீ! நீர் உம்முடைய மாணவர்களுக்கு எதைப் போதிக்கப் போகிறீர்? உயர்ந்தது யெதையும் உம்மால் போதிக்க முடியாதே" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

இதைக்கேட்ட மௌத்கல்யர் திகைத்து, எழுந்து தனக்குபதேசம் செய்த ஆச்சார்யனிடம் சென்று இப்படிக் கேட்டார்.

ஆசார்யா! மைத்ரேயர் பெரிய வித்வானா?

இதற்கு மௌத்கல்யரின் ஆச்சாரரியார் பதில் சொன்னார்; "ஆமாம் மைத்ரேயர் மூன்று வேதங்களின் உட்பொருளையும் நன்றாயறிந்தவர்" என்று

இதைக் கேட்ட பின் மௌத்கல்யர் தன்னுடைய மாணவன் ஒருவனை அழைத்து "நீ போய் மைத்ரேயரிடம் உபதேசம் பெற்ற ஒரு மாணவனை என்னிடம் அழைத்து வா" என உத்தரவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் மைத்ரேயரின் ஆசிரமத்துக்குச் சென்று அவரின் ஓர் மாணவனை அழைத்து வந்து மௌத்கல்யரிடம் காட்டி "இதோ மைத்ரேயரின் மாணவர்" என்று காட்டினான்.

அந்த மாணவனைப் பார்த்து மௌத்கல்யர் கேட்டார். "ஹே, மாணவா! உங்கள் ஆசாரியார் உங்களுக்கு என்ன உபதேசம் செய்கிறார்?" என்று

இதற்கு அந்த மாணவன் சொன்னால் "அவர் எங்களுக்கு மூன்று வேதங்களின் உட்பொருளையும் கற்பிக்கிறார்" என்று.

ஓம் உபநிஷதவான் பவ !!!

# காயத்ரீ உபநிஷத்

காண்டம் - 02

மௌத்கல்யர் அந்த மாணவனைப் பார்த்துச் சொன்னார் "உங்கள் ஆச்சாரியனுக்கு உண்மை தெரியாதென்று நினைக்கிறேன்; ஏனென்றால் உண்மை தெரிந்த ஓர் ஆச்சாரியன் தன் மாணவர்களுக்கு காயத்ரீயின் ஸ்தூல பொருளாகிய சாவித்ரியைப் பற்றித் தான் கற்பிக்க வேண்டும். அது ஆசாரிய மரபு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மாணவனே நீ உன் ஆச்சாரியனிடம் சென்று இப்படிச் சொல்- "ஆச்சாரிய! நீர் மௌத்கல்யரை மூடன் என்று சொன்னீராமே. அவர் உம்மை ஓர் கேள்வி கேட்பார். அதற்கு நீர் ஒருவருடத்துக்குள் சரியான விடையைச் சொல்லா விட்டால் உமக்குப் பெரிய அநர்த்தம் உண்டாகும்."

மேலும் மௌத்கல்யர் அந்த மாணவனைப் பார்த்து- "மாணவா! நானும் நான்கு வேதங்களைக் கற்றுத்தானிருக்கிறேன், அப்படியிருந்தும் உன் ஆச்சாரியன் என்னை மூடனென்று ஏன் சொன்னார்? ஒரு நல்லவன் மற்றொரு நல்லவனைப் பார்த்து இப்படிச் சொல்லலாமா? அதனால் நான் கேட்கப் போகும் கேள்விக்கு உன் ஆச்சாரியன் பதில் சொல்லப் போவதில்லை, ஏனென்றால் அவர் அதைப் பற்றி உங்களுக்குக் கற்பித்ததும் இல்லை, கற்பிக்க முடியாது.

பிறகு மௌத்கல்யர் தன்னுடைய ஒரு மாணவனை அழைத்து இப்படி சொன்னார் "நீ இந்த மாணவனுடன் மைத்ரேயரின் இருப்பிடம் சென்று அவரை 'பன்னிரண்டு மிதுனத்தை (இரட்டையை) இருபத்தி நாலு யோனியை உடைய ப்ருக அங்கிராக்களைக் கண்களாகக் கொண்ட சாவித்ரியான காயத்ரீயை உபதேசம் செய்யுங்கள்' என்று கேட்டு விட்டு வா"

மௌத்கல்யரின் மாணவன் மைத்ரேயரிடம் சென்று, ஆச்சாரியன் சொன்னபடி உபதேசிக்கும்படி கேட்டான். மைத்ரேயர் பதில் சொல்ல முடியாமல் திகைத்தார்.

ஓம் ஸாதகோ பவ !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபநிஷத்

## காண்டம் - 03

மௌத்கல்யரின் மாணவன் மைத்ரேயரைப் பார்த்துச் சொன்னார் "நீங்கள் மௌத்கல்யரை மூடன் என்று சொன்னீர்கள். ஆனால் அவர் கேட்கும் கேள்விக்கு உம்மால் பதில் சொல்ல முடியவில்லை. அதனால் உமக்கு ஒரு வருடத்துக்குள் ஒரு பெரிய கஷ்டம் வரும்." என்று.

அப்போது மைத்ரேயர் தன்னுடைய மாணவனைப் பார்த்துச் சொன்னார் "மாணவர்களே! நீங்களெல்லோரும் இப்போது அவரவர் வீட்டுக்குச் செல்லுங்கள். நான் மௌத்கல்யரை மூடன் என கருதினேன், ஆனால் அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாதவனாய் விட்டேன். அதனால் நான் அவரிடம் சென்று அவரை சாந்தப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் அனுப்பிய பின் மறுநாள் காலை மைத்ரேயர் கையில் சமிதையை எடுத்துக் கொண்டு மௌத்கல்யரிடம் சென்று சொன்னார்- "மௌத்கல்யரே! நான் உமக்கு சேவை செய்ய வந்திருக்கிறேன்" என்று,

மைத்ரேயரைப் பார்த்து மௌத்கல்யர் கேட்டார் "ஏன்"?

மைத்ரேயர் சொன்னார்:- "நான் உம்மை மூடன் என்று சொன்னேன், ஆனால் நீங்கள் கேட்ட கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை, அதனால் இப்போது உமக்குச் சேவை செய்து உம்மைச் சாந்தப்படுத்த விரும்புகிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌத்கல்யர் சொன்னார்:- நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் ஆனால் பலன் "மைத்ரேயர் நல்லெண்ணத்தடன் மௌத்கல்யரிடம் செல்லவில்லை" யென்று ஆனால் நான் உமக்கு என் கல்யாண (நன்மைதரும்) பாவனையைக் கொடுக்கிறேன், இதைப் பெற்றுக் கொண்டு திரும்பிச் செல்லுங்கள்.

மைத்ரேயர் சொன்னார்- "நீங்கள் சொன்னதால் என் பயன் அகன்றது, உங்கள் தயை வெளிப்பட்டது. நான் சமித்துடன் வந்திருக்கிறேன், உமக்கு சேவை செய்ய அனுமதியுங்கள்."

விதிப்படி மைத்ரேயர் சேவையை தொடங்கினார்.

உபசாரம் முடிந்த பின் எதிரில் அமர்ந்து கேட்டார்...

ஸவிதா வின் வரேண்யம் என்பது யெது?
அந்த தேவனின் பர்க யெது?
மற்றும் தீ என்ற சொற் பொருளை விளக்குங்கள். இதன் வழியாகத் தானே சகல உயிர்களிலும், பொருள்களிலும் ஸவிதா ப்ரவேசிக்கிறது.

ஞானவான் பவ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபநிஷத்

## காண்டம் - 04

அப்படிக்கேட்ட மைத்ரேயருக்கு மௌத்கல்யர் விடை சொன்னார்:

"வேதங்களும், சந்தங்களுமே ஸவிதாவின் வரேண்யம், வித்வான்கள் அன்னத்தையே அத்தேவனின் பார்க்க வென்று சொல்கிறார்கள் கர்மமே அந்த தீ தத்துவம், அதன் வழியாகத் தான் ஸவிதாசகலத்தையும் பிரேரேபித்தபடி சஞ்சரிக்கிறார்.

இந்த விடையைக் கேட்ட மைத்ரேயர், மறுபடி மௌத்கல்யரைக் கேட்டார்- "ஸவிதா என்பதென்ன? ஸவித்ரீ யென்பதென்ன?"

மைத்ரேயர் வேதங்கள் அனைத்தையும் படித்தவரானாலும் காயத்ரீ ரகசியத்தை அறிந்திருக்கவில்லை. காயத்ரீ ரகசியத்தை அறிந்துள்ளதால் தான் மௌத்கல்யர் சிறப்படைந்திருக்கிறார் என்பதை புரிந்து கொண்டார். அதனால் தானும் அவரிடமிருந்து அந்த ரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்பதைக் கருதியே தன் ஆஸ்ரமத்தைக் கலத்து விட்டு, குரு காணிக்கையாக சமித்தைக் கையில் வைத்துக் கொண்டு மௌத்கல்யரிடம் சென்றார். அவர் மௌத்கல்யரைக் கேட்ட மூன்று கேள்விகளின் உட்கருத்து இவைதான்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸவிதாவின் - பரம் பொருளை, வரேண்ய - அடையும், அறியும் வழி என்ன?

2. அந்த தேவனின் - பரமாத்மாவின், பர்க- சக்தி, பலம் யெது?

3. எதன் வழியாக கடவுள் அனைத்தையும் நடத்துவிக்கிறார். கடவுளின் அருள் எதன் வழியாகக் கிடைக்கும்?

இதற்கு மௌத்கல்யர் கூறிய விடைகளின் உட்கருத்து:-

வேதம் = ஞானம், சந்தஸ் = அநுபவம் , ஆத்ம ஞானத்தால் பரமாத்மா ஞானம் உண்டாகும்.

அனுபவமில்லாமல் ஆயிரம் புத்தக விஷயங்களைப் படித்து வைத்துக் கொள்வது, வாசனைப் பொருட்களைச் சுமக்கும் கழுதைக்கு அவ்வாசனைகளால் பயனில்லாதது போன்றது தான் கிளிகள் போல் மந்திரங்களை வாயளவில் உருப்போடுவதால் யாதும் பயனில்லை. நமக்கு அனுபவ ஞானம் உண்டாக வேண்டும். இதைப் பெறவேண்டுமென்ற அடக்க முடியாத ஆர்வம் உண்டாக வேண்டும் அந்த சிரத்தையைச் செயல் முறையில் செயல்படுத்த வேண்டும். இதற்குத் தேவையான உண்மை பேசல், பரோபகாரம், புலனடக்கம், மரியாதை முதலிய நற்குணங்களை மேற் கொண்டொழுக வேண்டும். அதனால் வேதங்களை மனப்பாடம் செய்து உருப்போடுவதால் பயனில்லை அவைகளில் சொல்லியுள்ள விஷயங்களின் உட்பொருளை நன்றாக தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி நடக்க முயற்சி செய்ய வேண்டும். பரம் பொருளை அறியும் வழி வேதங்களின் உட்பொருளைத் தெளிவாயறிந்து, அவைகளை அநுபவத்தில் கொண்டு வருவது தான்.

இரண்டாவது மூன்றாவது கேள்விக்கு மௌத்கல்யர் சொன்ன விடைகளின் விளக்கத்தை அடுத்த பாடத்தில் ஆராய்வோம்.

சுபம் பவது !!!

# காயத்ரீ உபநிஷத்

## காண்டம் - 05

மைத்ரேயர் கேட்ட மூன்று கேள்விகளுக்கு மௌத்கல்யர் சொன்ன விடைகளில் முதல் விடைக்கு விளக்கம் சென்ற பாடத்தில் கூறப்பட்டது. இப்போது இரண்டாவது விடைக்கு விளக்கம் காண்போம்.

கேள்வி:- பரம் பொருளின் பலம் எது?
விடை:- பரமாத்மாவின் பலம் - அன்னம். அன்னம் என்றால் சாதனை என்று பொருள்.

'அர்ஜுனா! நான் ஒரு விநாடி கூட ஓய்வொழிவில்லாமல் உழைத்துக் கொண்டேயிருக்கிறேன், ஒரு விநாடி நான் சோம்பலாக இருந்தால் பிரபஞ்சம் ஸ்தம்பித்து விடும். ப்ரபஞ்சம் இருக்காது'. என்று கண்ணன் தன் சாதனையைப் பற்றி கீதையில் விளக்குகிறார். நல்லவன், உத்தமன், மேலானவன்; ஆனால் பலமில்லாதவன், இவன் தனக்கும், பிறர்க்கும் ஏதாவது நன்மையைச் செய்ய முடியுமா? 'நாயமாத்மா பலஹீனேனலப்ய!' பரமாத்மாவை பலகீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையமுடியாது என்று உபநிடதம் கூறுகிறது. இந்த பலமும் அசுர பலமாயிருக்கக் கூடாது. தெய்வ பலமாயிருக்க வேண்டும். இறைவனைப் ப்ரார்த்திக்கும் போது 'பலமஸி பலம் மயி தேஹி' இறைவா! நீயே பலம், உன் பலத்தால் என்னைப் பலவானாக்கு' என்று வேண்டுகின்றேன். பரம் பொருள் பலவானென்பதை அவர் புரியும் சாதனையால் தான் அறிந்து கொள்கிறோம். சூரியாதி கோளங்களை எல்லாம் ஆக்கி அமைத்தளிக்கும் இறைவன் ப்ரபஞ்ச முழுமையை விடப் பலமானவராயிருக்க வேண்டுமென்பதில் என்ன சந்தேகம்? ஆக சாதனைதான் பகவானின் பலம் அந்த பலத்தைப் பெற விரும்புபவன் தொடர்ந்த வைராக்கியமான சாதனை செய்ய வேண்டும் என்பதுதான் இதன் உட்கருத்து. 'சாதனையின்றி யொன்றைசாதிப்பாருலகில்லை' ஆதலால் வெறுமனே வேதாதி சாஸ்திரங்களை உருப்போடுவதை விட்டு அவைகளில் கூறப்பட்டுள்ள சாதனைச் செய்து தெய்வ பலம் பெற வேண்டும்.

இனி மூன்றாவது கேள்விக்கு மெத்கல்யர் அளித்த விடையின் உட்பொருளை ஆராய்வோம் :-

கேள்வி :- எதன் வழியாக அனைத்தையும் கடவுள் நடத்துவிக்கிறார், கடவுள் அருள் எதன் வழியாகக் கிடைக்கும்?

விடை :- 'தீ' அறிவின் வழியாக அனைத்தையும் பிரேபிக்கிறார், பரமாத்மாவின் கிருபையால் அவர் அருளைப் பெறலாம். எந்தக் காரியத்தைச் செய்யவும் அறிவு வேண்டும். ஒன்றைப் பற்றி அறியாதவன் அதைச் செய்ய முடியாது. பிரபஞ்சத்தை எல்லாம் ஆக்கியமைத்தளிக்கும் பரமாத்மாவுக்கு அவை பற்றிய பூரண அறிவு இருக்க வேண்டுமல்லவா? அவ்வறிவைக் கொண்டு அவர் எல்லாக் காரியங்களையும் திட்டமிட்டு நடத்துகிறார். 'சர்வஜ்ஜர்' என வேதாதிகள் இறைவனைக் கூறுகின்றன. ஆக 'தீ' அறிவைக் கொண்டுதான் இறைவன் சகலதையும் நடத்துவிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் அருளை அவன் தயவால் தான் பெறவேண்டும் 'அவனருளால் அவன்தாள் வணங்கி' என்றார் ஆன்றோர். பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களும் இறைவனின் மாயா தோற்றங்கள், அதனால் எதைக் கொண்டு இறைவனின் அருளைப் பெறமுடியாது. இறைவன் யாருக்குத் தன் அருளை பாலிக்க விரும்புகிறாரோ அவருக்கே அவ்வருள் கிடைக்கும் இறைவனே பஷபாதம், ஓரவஞ்கனை இல்லாதவர்.அதனால் தானாக ஒருவருக்கு அருள் செய்து மற்றவர்க்குச் செய்யாமற் போகமாட்டார். அப்படி இருக்க ஒரு சிலர் மட்டும் அவனருளுக்குப் பாத்திரமாக வேறு சிலர் அதற்குப் பாத்திரமாகாதிருக்கக் காரணமென்ன, 'கேட்டால் கொடுக்கப்படும் தட்டினால் திறக்கப்படும்' என்பது பைபிளின் உபதேசம். யார் முறையாகக் கேட்கிறார்களோ அவர்களுக்கு இறைவன் அருள் புரிவான். கேட்காதவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்களல்லவா? பசிக்காதவனுக்கு அன்னமிட முடியாது பசித்தவனுக்கு அன்னமிடுவது தானே நியாயம். இறைவன் அருளைப் பெற விரும்பும் பசி கொண்டு பிரார்த்தனை மூலம் தனக்கு அருள் புரிந்தருள வேண்டுமென்று மன்றாடிக் கேட்கும் பக்தனுக்கு இறைவன் அருள்புரிவான். இறைவன் அருள் பெற அவனிடம் அதைப் பிரார்த்திப்பது தான் வழி.

இறைவனைப் பிரார்த்தித்து அவன் பேரருள் பெற்றுய்ய நல்லறிவு உதிக்க வேண்டும். நல்லறிவை இறைவனிடம் பிரார்த்தித்துப் பெற்று அறிவை நல்லதாக்கிப் பின் இறைவன் அருளைப் பெறவேண்டும்.

மௌத்கல்யர் தொடர்ந்து மைத்ரேயருக்குச் செய்த உபதேசத்தை அடுத்த பாடத்தில் படிப்போம்.

ஓம் ப்ரஹ் மவிதோ பவ !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபநிஷத்

## காண்டம் - 06

மைத்ரேயருக்கு, மௌத்கல்ய முனிவர் காயதரீ மந்த்ர இரகசிய யத்தை விளக்குகிறார்.

(01)

மனம் ஸவிதா, வாக் ஸாவித்ரீ; மனம் எங்கிருக்கிறதோ அங்கு வாக்கிருக்கிறது. எங்கு வாக்கிருக்கிறதோ அங்கு மனம் இருக்கிறது. மனமும் வாக்கும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.

(02)

அக்கினி ஸவிதா, பூமி ஸாவித்ரீ; அக்கினியிருக்குமிடமெல்லாம் பூமியிருக்கும்; பூமியிருக்குமிடமெல்லாம் அக்னியுண்டு பூமியும், அக்னியும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.

(03)

வாயு ஸவிதா, அந்தரிஷம் (வானத்துக்கும்- பூமிக்கும் இடையிலுள்ள பரப்பு) ஸாவித்ரீ, வாயு இருக்குமிடமெல்லாம் அந்தரிஷமும், அந்தரிஷமுள்ள இமெல்லாம் வாயு இருக்கும் இவை இரண்டு ஒரே பிறப்புடைய இரட்டைகள்.

(04)

ஆதித்யன் (சூரியன்) ஸவிதா, த்யுலோகம் (வானம்- சூர்யாதி கிரகங்கள் ச்ஞ்சரிக்கும் பாதை) ஸாவித்ரீ ஆதித்யன் இருக்குமிடமெல்லாம் த்யுலோகமும் த்யுலோகமிருக் குமிடமெல்லாம் ஆதித்யனும் இருக்கும். இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.

(05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் ஸவிதா நட்சத்திரங்கள் ஸாவித்ரீ, ஒன்றிருக்குமிட மெல்லாம் மற்றதிருக்கும். இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.(06)

இரவு பகலும் ஒன்றிருக்குமிடத்தில் மற்றதும் இருக்கும் பகல் ஸவிதா, இரவு ஸாவித்ரீ. இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.(07)

சூடு ஸவிதா, குளிர்ச்சீ சாவித்ரீ. இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.(08)

மேகம் ஸவிதா, மழை ஸாவித்ரீ. இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.(09)

மின்னல் ஸவிதா இடி ஸாவித்ரீ. இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்.

இதே போல் ப்ராண- அன்னம், வேதங்கள்- சந்தங்கள், யஜ்ஞம்- தஷணை, முதலியவைகளைப் பற்றியும் மௌத்கல்யர் இப்படியே உபதேசிக்கிறார்.

இவைகளின் கருத்தை அடுத்த பாடத்தில் ஆராய்வோம்.

ஓம் சத்யவான் பவ !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபநிஷத்

## காண்டம் - 07

மௌத்கல்யர் இப்படி ஸவிதா- ஸாவித்ரீ தொடர்புகளைச் சொல்லக் கேட்ட மைத்ரேயர் சொல்கிறார்:-

> வித்வானாகவும், பரோபகாரியாகவும் விளங்கும் மௌத்கல்யரே! நான் பிரம்மசாரி தங்களுக்குச் சேவை செய்வதற்காக வந்தேன் இங்கு வந்த நான் இப்போது நல்ல ஞானத்தைப் பெற்றுவிட்டேன். இப்படிச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு, மைத்ரேயர் தன் ஆஸ்ரமத்துக்குச் சென்று விட்டார்.

முன் பாடத்தில் மௌத்கல்யர் விளக்கிய ஸவிதா- ஸாவித்ரீகள் யாவை என்பதை இப்போது ஆராய்வோம்- ஒவ்வொரு மந்திரத்துக்கும் ஒரு தேவதையுண்டு, இதுவே அந்த மந்திரத்தால் வழிபட, உபாசிக்கப்படும் தேவதை காயத்ரீ மந்திரத்தின் தேவதை ஸவிதா என்பதை நீங்கள் அறிவீர்கள். ந்யாசத்தில் 'ஸவிதா தேவதா' என்று சொன்னோமல்லவா? இந்த ஸவிதா தேவதையைக் கொண்டுள்ளதால் காயத்ரீ மந்திரத்துக் 'ஸாவித்ரீ' யெனப் பெயர்.

மௌத்கல்யர் சொன்ன விஷயங்களிலெல்லாம் ஸவிதா இருக்கும் இடமெல்லாம் ஸாவித்ரீ உண்டு. ஸவிதாவே ஸாவித்ரீ, ஸாவித்ரியே ஸவிதா: இரண்டும் ஒரே பிறப்புடைய இரட்டைகள்' என்றார். அதன் கருத்து ஸவிதா- சக்தியின் கேந்திரம், ஸாவித்ரீ அதன் செயல் நிலை. பெற்றறியும் அதிலிருந்து வெளிப்படும் மின் சக்தியையும் போன்றது, ஸவிதாவும் ஸாவித்ரீயும் ஸவிதாவை செயல்படுத்துவது, இலக்கமாகப் பரிணமிக்கச் செய்வது ஸாவித்ரீ ஸவிதா ஸ்ரீ பரம்பொருள், ஸாவித்ரீ அவரின் சக்தி நிர்விகார, நிரஞ்சன நிஷ்களங்கமான பரமாத்மாவை பிரபஞ்சத்தை இயக்கும், விகாரமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்கமய முடையதான முறையில் தோற்றுவிப்பது அவரின் சக்தி இச்சக்தியின் வழியாகத்தான் பரம் பொருள் அறியப்பட முடியும். இந்த உண்மையை விளக்கவே மௌத்கல்யர் பல உதாரணங்களைச் சொல்லி வந்தார்.

மனம் - ஸவிதா, வாக் - ஸாவித்ரீ. மனதின் இயக்கத்தின் பெயர்வாக எண்ணம் பேசுவதற்கு தோற்றுவாய்; மனதில் ஒரு பாஷை தெரியாவிட்டால் வாயால் பேச முடியாது: வாய் பேசுமுன் மனதில் தான் வாக்கு தோன்றுகிறது மனதில் உதிப்பதைதான் வாக்கு வெளிப்படுத்துகிறது. வாக்கு உதிக்கும் போதெல்லாம் மனம் இயங்குகிறதென்று பொருள். மனம் நிலைக் களம், வாக் செயற்களம். இது போன்றது தான் ஸவிதா- பரப்ரம்மம், ஸாவித்ரீ- அவரின் சக்தி.

அக்னி- ஸவிதா, பூமி - ஸாவித்ரீ. பூமியாக ஒரு பொருள் இருப்பதற்கு ஆதாரம் அக்கினிதான். அக்னியை வெளிப்படுத்தினால் பொருள்களெல்லாம் அணுக்களாகிவிடும். அணுக்களைப் பொருள்களாக இணைத்திருப்பது அக்கினி. பூமியின் அக்கினி பிரிந்துவிட்டால் சாம்பல்தான் மிஞ்சும். அக்கினியின் செயல் நிலைதான் பூமி. இது போன்றது ஸவிதா- ஸாவித்ரீ தொடர்பு.

இதே போல் வாயு- அந்தரிஷம், ஆதித்யன்- வானம், சந்திரன்- நட்சத்திரம், பகல்- இரவு, சூடு- குளிர், மேகம்- மழை, மின்னல்- இடி இவைகளும் ஒன்று நிலைக்களம். மற்றது அதன் சக்தியாக வெளிப்படும் செயல் நிலையென்பதை யூகித்தறிந்து கொள்ளலாம்.

எப்படி இவைகளில் ஒன்று கேந்திரஸ் தானமாகவும், மற்றது அதன் செயலாகவும் இருக்கிறதோ, அப்படியே ஸவிதாவும்-ஸாவித்ரீயும், பரப்ரம்மமும் அதன் சக்தியான காயத்ரீயும் இருக்கிறது. ஸ்விதா நிலைக்களம். ஸாவித்ரீ அதன் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காயத்ரீ- பரப்ரம்மத்தின் செயல் சக்தி' என்பதைத் தான் மௌத்கல்யர் மைத்ரேயருக்கு விளக்கினார்.

ஓம் ஞானவான் பவ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ கீதை

பிரம்ம வித்தை யோகவித்தைகளின் சாரத்தை உள்ளடக்கி ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் "பகவத்கீதை" எப்படி உண்டாயிற்றோ அப்படி காயத்ரீ மந்திரத்தின் உட்பொருளைச் சுருக்கமாக விளக்கி "காயத்ரீ கீதை" உண்டாயிற்று. அந்த கீதையை கருத்துரை விளக்கவுரைகளுடன் இதில் வெளியிடுகிறோம்.

காயத்ரீ மந்திர எழுத்துகளில் ஒவ்வொன்றும் அரிய கருத்தக்களையும், சக்திகளையும் வெளிப்படுத்துபவை. ஒவ்வொன்றும் இக உலக சம்பந்தமாகவும், பரவுலக சம்பந்தமாகவும் சில அர்த்தங்களை விளக்குகின்றன. அவைகளைப் பற்றி விளக்குவதே கீதை.

- கண்ணைய யோகி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுலோகம் — 01

வேதங்கள் யாரை நியாயத் தலைவன் சச்சிதானந்த வடிவினன், சர்வேஸ்வரன் பொது நோக்குடையவன், பிரபஞ்சத்தை நடத்துவிப்பவன், பிரபஞ்சத் தலைவன், உருவமற்றவன் என்று சொல்லுமோ, எது பிரபஞ்ச முழுதும் ஆத்மவடிவாகப் பரவியிருக்கிறதோ அப்பரம் பொருளின் எல்லாப் பெயர்களிலும் மேலான பாபம் போக்கும் பவித்திரமான தியானம் செய்யத் தகுந்த முக்கிய பெயர் 'ஓம்'

**விளக்கவுரை:-**

காயத்ரி மந்திரத்தின் முதல் எழுத்தாகிய 'ஓம்' என்பதன் பொருளை இது விளக்குகிறது. கடவுள் நியாயதிகாரி, அதனால் அவரருளைப் பெற விரும்புபவன் எதிலும் நியாய முள்ளவனாயிருக்க வேண்டும். அநியாயம் செய்பவனுக்கு பஷபாத முடையவனுக்கு தெய்வ உபாசனை பலன்தராது. கடவுள் சச்சிதானந்தன் தன்னை சத்துப்பொருளாக, சித்துப் பொருளாக ஆக்கிக்கொள்வதன் மூலம் ஆனந்தத்தைப் பெற வேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பமில்லாதவனுக்கு உபாசனை பயன்தராது.

கடவுள் சர்வேஸ்வரன் - அனைத்துக்கும் தலைவன் ஒரு இடம் ஒரு ஜாதி, ஒரு மதத்துக்கு மட்டும் உரியவர் கடவுள் என்று குறுகிய மனப்பான்மை கொண்டவனுக்கு உபாசனை பயன் தராது. கடவுள் சம நோக்குடையவன். மனிதரில் ஜாதியின் பெயரால் கல்வி, ஒழுக்கம், செல்வம், நிறம் இவைகளின் பெயரால் உயர்வு, தாழ்வுகளைக் காண்பவன் உபாசனையால் பயன் பெறமாட்டான். அனைத்தும் உயிரென்றெண்ணுபவனுக்கே தெய்வ உபாசனை பயன் தரும்.

கடவுள் பிரபஞ்சத்தை நடத்துபவன்:- இயற்கைக்குட்பட்டு, இறைவனின் கைப்பாவையாகத் தன்னை நினைத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுகாதவனுக்கு உபாசனை பயன் தராது. நாகரீகத்தின் பெயரால் இயற்கை வாழ்க்கை முறையைக் கைவிட்டு விடுபவனுக்கு தெய்வ அருள் சேராது.

கடவுள் பிரபஞ்ச தலைவன்:- தனக்கொரு தலைவனுண்டு என்று நினைத்து தான் செய்யும் காரியங்களைத் தன் தலைவன் மறைவிலிருந்து கவனிப்பவன் என்ற பயத்துடன் தலைவன் திருப்தி கொள்ளக் கூடியதான நற்கருமங்களைச் செய்பவன் தான் உபாசனா சித்தியைப் பெறுவான்.

கடவுள் உருவமற்றவர்:- தன் உருவில் இயங்கும் உடல் மனங்களில் சூக்ஷ்மத்தை உணரும் ஏகாக்ர சாதனை செய்பவன் தான் உபாசனையின் பயனை பெறுவான். உருவில் அருவச் சக்தியைக் கொணரும் முயற்சியில் உபாசனை - யோகம் முதலியவைகளில் ஈடுப்படுபவன் தான் தெய்வ அருளைப் பெறமுடியும்.

ஆத்ம வடிவாக வியாபித்தவர் கடவுள்:- ஆன்மாவை அறியும் முயற்சியில் ஈடுபடாமல் ஜட உலகை அறிந்ததுடன் அறிவு முடிந்தது என்றிருப்பவன் உபாசனா சித்தி பெறமாட்டான்.

இவ்வளவு கருத்துக்களையும் வெளிப்படுத்துகிறது காயத்ரீ மந்திரத்தின் முதலெழுத்தாகிய 'ஓம்' இதை ஜெபிப்பவனுக்கு சகல பாவங்களும் விலகி, உள்ளம் தூய்மையடைவதனால் தியானம் செய்யும் பக்குவம் அவனுக்கு உண்டாகிறது.

இது இந்த முதல் சுலோகத்தின் கருத்து.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுலோகம் – ௦௨

இதில் பூர் எழுத்தின் பொருள் விளக்கப்படுகிறது. வேதங்களின் முடிவை அறிந்த முனிவர்கள் பூர் என்பது ப்ராணனை குறிக்கிறது எனக்கண்டிருக்கிறார்கள். இந்த ப்ராணன் உயிருள்ள உயிரல்லாத எல்லா ஜீவர்களிலும் சமானமானப் பரவி இருக்கிறது. இதனால் உயிருள்ள அனைத்தும் சமமே என்பது பெறப்படுகிறது. ஆகவே எல்லா உயிர்களும் தன்னைப்போன்றதே என்று உணரவேண்டும்.

விளக்கவுரை

"நடமாடும் உயிர்களில் ப்ராணன் இருப்பது தெரிகிறது உயிரற்ற பொருள்களில் எப்படி ப்ராணன் இருப்பதை நம்ப முடியும்?" முட்டையில் ப்ராணன் இல்லை, அதிலிருந்து ப்ராணன் உள்ள குஞ்சு வருகிறது. குப்பை கூளங்களில் ப்ராணன் இல்லை. அதிலிருந்து பலவகை புழுபூச்சிகள் உண்டாகின்றன. விதையில் ப்ராணன் இல்லை. அதிலிருந்து ப்ராணனுள்ள செடி முளைக்கிறது. முட்டை, குப்பை, விதைகளில் ப்ராணன் உறைநிலையில் இருந்தது. தகுந்த சூழ்நிலை உருவாகும்போது உறை ப்ராணன் செயல்நிலைக்கு வருகிறது. கல், மண், உலோகங்களில் ப்ராணன் இருக்கிறதென இன்றைய விஞ்ஞானம் பல ஆராய்ச்சிகளின் முடிவாகக் கண்டுபிடித்திருக்கிறது. அனைத்திலும் ப்ராணன் இருப்பதை காண்பவர் அனைத்திலும் அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணுவர். காயத்ரியின் பூர் சப்தம் எங்கும் பரவியுள்ள ப்ராணனைக் குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகம் – 03

"உலகில் சகல துன்பங்களையும் போக்கடிக்கக் கூடிய சக்தி தான் புவ: எனப்படுகிறது. தன் கடமையாக மட்டும் செய்யப்படும் காரியங்களே கர்மம் எனப்படும். சுகபலனை எதிர்பார்க்காமல் கர்மங்களை செய்பவர்கள் எப்போதும் சந்தோஷமாகவே இருப்பார்கள்."

விளக்கவுரை:-

காயத்ரீ மந்திரத்தின் புவ : சப்தம் ஜபிப்பவர்களின் சகல துன்பங்களையும் போக்கி சந்தோஷத்தைக் கொடுக்கும். இதை அந்த சொல் எப்படிச் சாதிக்கிறது? சாதகர்கள் செய்யும் காரியங்களின் முடிவாகத் தனக்கு சந்தோஷமே கிடைக்கும் என்று எதிர்பாராமல் தன் கடமையாகவே சகல காரியங்களையும் செய்யும்படியான சுத்த கர்ம யோகியாக அவனை வாழச் செய்யும் பண்பை அவனிடம் சூகஷ்ம உடலுணர்வில் இச் சொல் உண்டாக்குகிறது. இந்த பண்பை சாதகனில் எப்படி உண்டாக்குகிறது என்பதைப் பார்ப்போம்.

உபாசகன் நாளுக்கு நாள் தன் கர்ம பலன்களில் மறைமுகத் தெய்வ சக்தி செயல்படுவதை அறிகிறான். சில சமயங்களில் ஓர் காரியத்தின் முடிவாகத் தான் எதிர்பார்த்த நல்ல பலனைவிட அதிக நன்மைகள் விளைவதை காண்கிறான். மற்றொரு சமயம் தான் எதிர்பார்த்த பலனுக்கு மாறான பலன் உண்டாகக் கண்டு முதலில் திகைத்தாலும் பின்னால் இப்படி நடந்திராமல் தான் எதிர்பார்த்தபடியே நடந்திருந்தால் அப்போதுயேதோ நன்மை விளைந்ததாகத்தான் கருதியிருந்தாலும், பின்னால் பெரிய கஷ்டத்தை அனுபவித்திருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து, தான் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போனது தான் தனக்கு நன்மையென்பதையும் இப்படிச் செய்வித்தது தன் உபாசனா மூர்த்தியின் செயலாகத்தான் இருக்கவேண்டுமென்பதையும் உணர்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பல காலம், பலமுறை தன் காரியங்கள் தான் எதிர்பார்த்த பலன்களைக் கொடுக்காமல் எதிர்பாராத பலன்களைக் கொடுப்பதாகவே ஆகி வருவதையும் அப்படி ஆகும் எல்லாம் தனக்கு நன்மை பயப்பதாகவே அமைந்து வருகின்றன. என்பதையும் சந்தேகமில்லாமல் தெரிந்து கொள்ளும் போது, பலன்களை நாடிக் காரியங்களைச் செய்யும் தன்மை அவனில் மெதுவாக மாறிப் போகிறது தான் கர்மத்தை மட்டும் செய்தால் போதும், அதன் முடிவாகத் தனக்கு நன்மை பயக்கும் பலனே வந்து சேரும் என்ற உறுதியை அடைகின்றான். இந்த உறுதி வலுப்பெற, வலுப்பெற அவன் சிறந்தோர் கர்மயோகியாகி விடுகின்றான். கர்ம பலன்களின் பற்றுக் கொள்ளாமல் கடமையாக மட்டும் கர்மங்களைச் செய்து, பலனைத் தன் உபாசனா தேவதைக்கே ஒப்படைத்து முதலில் கஷ்டமாகத் தோன்றினாலும் பின்னால் சுகத்தையே அடைகின்றான். இத்தகைய பண்பை அவனில் உண்டாக்க ஆதாரமாயிருந்தது காயத்ரீ மந்திரத்தின் புவ : சப்தமே.

சாதகர்கள் இவ்வுபதேசத்தை மனதிற் கொண்டு சகல காரியப் பொறுப்பையும் தன் உபாசனா தேவதைக்கு ஒப்படைத்து கடமையாக மட்டும் கர்மங்களைச் செய்து அதனால் விளையும் எதையும் தன் உபாசனா தேவி தனக்குப் புரியும் நல்லதாகவே கருதும் மனப்பான்மையை வளர்த்துப் பயனடைய வேண்டும்.

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகம் – 04

காயத்ரீ மந்திரத்தின் 'ஸ்வ' சப்தம் மனதின் நிலைப்படுத்தும் தன்மையைக் குறிக்கிறது. சஞ்சலப்படும் மனதை நிலையாகவும் சுகத்தைப் பற்றியே நினைப்பதாகவும் வைத்திருக்க வேண்டும். சத்தியத்தில் ஆழ்ந்திரு இந்த உபாயத்தால் ஸம்யமியுருடன் மூவகை சாந்திகளையும் பெறுகிறான்.

விளக்கவுரை:-

மூவகை சாந்திகள்:- உடல் சாந்தி, மனச் சாந்தி, ஆத்ம சாந்தி, உடல் எப்போதும் பலவகையாக இயங்கி கொண்டிருக்கிறது. மனம் எப்போதும் எதையாவது நினைத்துக் கொண்டேயிருக்கிறது. ஆன்மா எப்போதும் மன பொறிகளின் வழி இன்ப துன்ப அனுபவங்களை அனுபவித்துக் கொண்டேயிருக்கிறது. இதனால் இம் மூன்றும் எப்போதும் சாந்தியாய் அமைதியாய் இருக்கும் சுகத்தை அநுபவிப்பதில்லை. உழைத்தவன் களைப்பாறுதலில் சுகத்தையும் இழந்த சக்தியையும் பெறுவதுபோல் உடல் ஆன்மா, மன இயக்கங்கள் சாந்தியடைந்தால் இம்மூன்றும் சக்திபைப்பெற்று சுகானுபவத்தை அனுபவிக்கும். சாந்தி அமைதி பெறாதவரை உண்மை சுகாநுபவம் இவைகளுக்குத் தோன்றா. சக்தி நிறைந்ததாகவும் ஆகா.

இம்மூன்று சாந்தியையும் பெறுவதுயெப்படி?

01. மனதை நிலைப்படுத்து:- பக்தி, சாதனை முதலியவைகளின் துணையால் மனதின் கவனத்தைக் கட்டுப்படுத்தினால் மனச்சாந்தியடையும். மனம் சாந்தியானாலே அதனால் இயக்கப்படும் உடலும், அதன் வழி வெளியேற செயல்படும் ஆன்மாவும் சாந்தியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. எப்போதும் சுகத்தைப் பற்றியே நினை:- சாந்தியேற்படுவது சுகம் சுகத்தை நினைப்பதிலேயே மனம் ஈடுப்பட்டால் அதன் சலனமடங்கி சாந்தியுறும். மனதின் சாந்தத்தால் உடலும் ஆன்மாவும் சாந்திபெறும்.

03. சத்தியத்தில் ஆழ்ந்திரு :- அதிகமாய் சஞ்சலிக்க பொய்யை மெய்யெனக் கருதும் அறியாமையே காரணம், அறியாமையால் ஆசை, ஆசையால் உடல் - மன - ஆன்மாக்களின் சஞ்சலம். அதனால் சத்தியம் என்னதென்பதையறிந்து, அதிலேயே ஈடுபட்டிருக்கத் தொடங்கினால் ஆசையறுந்து, உடல், மன, ஆன்ம இயக்கங்கள் சாந்தியடையும்.

மனதை நிலைப்படுத்தல், எப்போதும் சுகத்தையே பாவித்திருத்தல் எப்போதும் சத்திய வாழ்க்கையில் ஆழ்ந்திருத்தல் ஆகியவை உடல், மன, ஆன்மாக்களைச் சாந்தப்படுத்தும் சாதனங்களாகும். ஆனால் மறைமுகமானதொரு தெய்வ அருளின் உதவியில்லால் மனிதன் தானாகவே இந்த சாதனங்களை மேற்கொண்டு சாந்தியைப் பெறமுடியாது. காயத்ரீ ஜபத்தில் ஜபிக்கப்படும் 'ஸ்வ' என்ற சொல் மனிதனுக்கு இந்த மூன்று வகைச் சாதனைகளையும் மேற் கொள்ளும் ஆற்றலைக் கொடுக்கிறது. ஆகவே காயத்ரீ ஜபத்தைச் செய்து வருபவனின் உடல், மன, ஆன்மாக்கள் மெது மெதுவாய் தன் கவனத்தன்மையை இழந்து நிலைப்பட்டு சாதகனுக்கு மாறாத பெரிய சுகத்தைக் கொடுப்பவையாக ஆகிவிடுகின்றன.

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுலோகம் — 05

இவ்வுலகில் தன் பிறப்பு மரண இரகசியங்களை யறிந்து பயத்தையும் ஆசையையும் வென்று தன் வாழ்க்கை முறையைத் தானே அமைத்து கொள்பவனே அறிவாளி-புத்திமான் என்று 'தத்' சப்தம் விளக்குகிறது.

விளக்கவுரை:-

பிறப்பு இறப்பின் இரகசியம் :- இதில் எத்தனையோ இரகசியங்கள் இருக்கின்றன. மரணம் ஏற்படுவது பிராணனின் பிரிவால். பிறப்பு உண்டாவது பிராணனின் சேர்க்கையால், பிறப்பிறப்புக்கு ஆதாரமானது பிராணன். பிராண இரகசியத்தை காயத்ரீ மந்திரத்தின் 'தத்' அந்த பிராணன் என்ற சொல் குறிக்கிறது. 'பிராணஸ் த்வம் ஜ்யோதிஷாம் பதி' - பிராணனே! நீதான் ஜோதித்தலைவனான சூர்யனாயிருக்கிறாய் என்கிறது வேதம். ஆக பிறப்பிறப்புக்கு ஆதாரம் சூரியன் சூரிய சக்தி தான் காயத்ரீ மந்திரம். அதனால் காயத்ரீ உபாசனையால் மனிதனுக்கு பிறப்பிறப்பின் இரகசியம் விளங்கும். காயத்ரீ மந்திரத்தில் அந்த இரகசியத்தை விளக்கும் அலைவேகத்துச் ஆதாரமானது 'தத்' சப்தம்.

பயங்களில் சிறந்தது மரணபயம். சகல ஆசாபாசங்களையும் விருப்பத்துக்கு மாறாக விட்டு போகச் செய்வது மரணம். மரண இரகசியம் விளங்கினால் இந்த பயம் அற்றுப் போகும். எப்படியும் உலக ஆசை மறைந்து போவதால் மரணிப்பது நிச்சயம். ஆசைக்குறு பொருளையெல்லாம் நிச்சயமாய் விட்டுப் போயே ஆகவேண்டும். மரணம் தவிர்க்க முடியாதது. என்பதை கேள்வி வாயிலாக, படிப்புவாயிலாக மட்டும் அறிந்ததல்லாமல் காயத்ரீ ஜபத்தால் உற்பத்தியாகும், ஆன்மஞானத்தின் வழி அறிபவன் நிச்சயமாய் ஆசாபாசங்களை விட்டு மரணத்துக்கு அஞ்சாத உறுதியைப் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவான். இத்தகைய ஞான உறுதியை உண்டாக்குவது காயத்ரீ மந்திரத்தின் 'தத்' சப்தம்

ஆசாபாசங்களின் பூர்த்திக்காக ஈடுபடும் வழியில் தான் வினைப்பயன் மனிதனை ஆட்டி படைக்கிறது. ஆசாபாசங்களை விட்டவனை வினைப்பயன் பற்ற முடியாது. அதனால் அவன் தன் வாழ்க்கைப் பாதையைத் தானே வகித்து நடத்துபவனாய் விடுகிறான். வினைக்குகந்த வாழ்க்கை முறை அவனில் செயல் படுவதில்லை. இத்தகைய பண்பைச் சாதகனில் உண்டாக்குவது காயத்ரீயின் 'தத்' சப்தம்.

காயத்ரீ ஜபத்தால் மரண இரகசியத்தை அறிந்து உலகின் ஆசாபாசங்களை அறுத்து நம் வாழ்க்கை முறைக்கு நாமே அதிகாரியாக ஆகி இன்பவாழ்க்கையை இனிதாக நடத்தி வரமுடியும்.

- சுபமஸ்து -

## சுலோகம் – 06

இதில் "ஸவிது" என்னும் சொல்லின் பொருள் விளக்கப்படுகிறது. மனிதன் சூரியனைப் போல பலவானாக இருக்க வேண்டும். தன் வாழ்க்கையின் அனுபவங்களெல்லாம் தன் ஆத்மாவின் தொடர்புடையவையே என அறிந்தொழுக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கவுரை:-

பூமியையும் மற்றும் பல கோள்களையும் தம்மைத் தாமே சுற்றவும், தன்னை வலம் வரவும் செய்யும் சூரியனின் சக்தியை அளவிட்டுச் சொல்ல முடியுமா? அதைப்போல் மனிதன் சக்திமானாக வாழ வேண்டும். ஆத்மானுபவம் தவிர வாழ்க்கையில் வேறு குறிக்கோள் இல்லையென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மனிதனின் அறிவுக்கும் பலத்துக்கும் சூரியனே ஆதாரம். சூரிய சக்தியை காயத்ரி சாதனையாலும் ப்ராணாயாமத்தாலும் அதிகம் கவர்பவன் புத்திமானாகவும், பலவானாகவும் இருப்பான். இங்கு "பலம்" என்பது உடல் எடையைக் குறிப்பதல்ல. சிறிய உடலில் செய்யக்கூடிய அரிய சாதனைகளின் ஆற்றலைக் குறிப்பதாகும். தற்போதைய மனிதன் தனக்கென தன், ஆத்ம வளர்ச்சிக்கென ஒன்றையும் செய்வதில்லை. அவன் வாழ்க்கை முழுதும் அழியும் உடலைப் பேணுவதற்காகவே நடக்கிறது. எதைப் பேண வாழ்ந்தானோ அதனுடன் தொடர்பற்றுப் போகும் போது தனக்கென ஒன்றும் செய்யவில்லையே என்று பரிதாபப்படுகிறான். காயத்ரியின் "ஸவிது" என்னும் சொல் மனிதனில் நல்ல புத்தியையும் தனக்கென வாழ வேண்டுமென்ற எண்ணத்தையும் உண்டாக்கிறது.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகம் – 07

"வரேண்யம்" என்ற சொல்லின் பொருள் விளக்கப்படுகிறது மனிதர் எல்லோரும் எப்பொழுதும் மேன்மையையேகாண வேண்டும். மேன்மையையே சிந்திக்க வேண்டும். மேன்மையான காரியத்தையே செய்யவேண்டும் இப்படிச் செய்பவர்கள் மேன்மையை அடைவார்கள்.

விளக்கவுரை:-

மனிதர்கள் செய்யும் எல்லாக் காரியங்களும் இரண்டு குறிக்கோள்களை கொண்டவை. ஒன்று இன்பம், மற்றது மேன்மை இன்பமானவையெல்லாம் மேன்மையானவையன்று. பொருள்கள் உண்பது இன்பம் தரும். அதனால் அது மேன்மையைத் தருமெனச் சொல்ல முடியாது. லட்டு இனிமையானது ஆனால் அது உடலுக்கு துன்பத்தைச் செய்யலாம் கசப்புச் சுவை அனைவருக்கும். இன்பமானதல்ல. ஆனால் அது உடலுக்கு நன்மை செய்யலாம்.

சாதாரண மக்கள் இன்பத்தை மட்டும் நாடித்தான் தம் எல்லாக் காரியங்களையும் செய்கிறார்கள். இதன் பயனாகவே அவர்கள் பல தீர்க்க முடியாத துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் மேன்மையை நாடிச் செய்யும் காரியங்கள் இன்பம் தருபவையாயில்லா விட்டாலும் துன்பத்துக்கு வழி செய்யா நிலையான இன்பம் பெற அவை வழிகோலும்.

மேன்மையைத் தரும் காரியங்கள் செய்பவனுக்கு அப்போது இன்பம் தருபவையாய் இருக்காதாகையால் அத்தகைய காரியங்களைச் செய்ய யாரும் துணிய மாட்டார்கள். நாளைக்கு உடலுக்கு நன்மை கிடைக்கும் என்பதற்காக இன்று யாராவது எட்டிக் காயைத் தின்ன முற்படுவார்களா? நாளை நன்மைக்கு இன்று இன்பமில்லாத காரியத்தை மக்கள்யேற்கச் சித்தமாயிருக்க மாட்டார்கள்.. ஆனால் நாளைய நன்மைக்கு இன்று கஷ்டங்களையேற்கத் தயாரில்லாதவர்கள் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் நன்மையைப் பெறமாட்டார்கள் அப்படியானால் ஒருவன் தன் வருங்கால நன்மைகளைக் பெறுவது தான் எப்படி?

இதற்கு விடை காயத்ரீ உபாசனைதான். இந்த உபாசனையில் ஜபிக்கப்படும் காயத்ரி மந்திரத்தின் 'வரேண்யம்' என்ற சொல்லின் அலைக்கழிவு ஜெபிப்பவனுக்குத் தெரியாமலேயே அவன் சித்தத்தில் சுலபத்தில் ஒரு மாறுதலை உண்டாக்குகிறது. இம்மாறுதல் ஓரளவு பலமடைந்து விட்டால் சாதகர்களின் மனதில் அவனுக்குத் தெரியாமலே ஒரு சீரிய குணம் உண்டாகி விடுகிறது. அது அவன் செய்யும் எந்தக் காரியமும் தனக்கு நன்மை பயப்பது தானாயென்று ஆராய்ந்து செய்யும் மனப்பான்மை தனக்கு நன்மை பயக்கும் காரியம் செய்யும் அத்தருணத்தில் தனக்கு இன்பம் பயக்காத தாயினும், அதற்கு பதில் கஷ்டமே கொடுப்பதாயினும் அதைச் சந்தோஷமாய் தன் எதிர்கால நன்மையொன்றிலேயே நாட்டமாயிருந்து கஷ்டத்தையே சுகமாகக் கருதி துன்பத்தையே இன்பமாகக் கருதிச் செய்யும் மனத்திறன் அவனுக்கு உண்டாகி விடும். இதனால் அவன் தனக்குச் சுகம் தரும் காரியங்களையே செய்து பிறவிப் பெரும் பயனை அடைவான்.

இந்தப் பண்பு உண்டாகப் பெறும் சாதகர்கள் தன் நன்மையைக் கருதி எப்போதும் தனக்கு நன்மைத் தருபவைகளையே கண்டும் கேட்டும் தொடர்பு கொண்டும் வாழத் தொடங்கி விடுவான். தனக்கு நன்மை தராத எந்த இனியதையும் அவன் காண கேட்க தொடர்பு கொள்ளமாட்டான்.

இத்தகைய உயரிய இயற்கைக் குணம் காயத்ரீ உபாசனையன்றி வேறொன்றாலும் மனிதனில் உண்டாகாது.

- சுபம் பவது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகம் – 08

பாபத்தில் பாப நாசத்தில் ஈடுபட்டு பாவத்தால் விளையக்கூடிய தீமைகளில் கவனம் வைத்து, பாபங்களைப் போக்குவதில் போரிட்டபடி வாழும் நல்லோர்களுக்கு இவ்வுலகமே ஸ்வர்க்கமாகும் என்பதை 'பர்க்கோ' என்ற சொல் விளங்குகிறது.

விளக்கவுரை:-

இவ்வுலகில் மனிதர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் அவர்கள் செய்த பாபம் காரணமாகிறது. பாபத்தால் உண்டாகாமல் தானே உண்டாகும் துன்பம் எதுவுமே இல்லை. எந்த பாபத்தால் எவ்வகைத் துன்பம் வரும் என்பதை மனிதன் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் பாபமில்லாமல் துன்பம் வரவே வராது என்பதை அறிந்து கொண்டால் இனியாவது துன்பம் வராதபடி தடுத்துக் கொள்ளும் வகையில் தன் வாழ்க்கையை அமைத்து கொள்ள முடியும். பச்சிளங் குழந்தை பருவமுதல் மண்ணுலகை விட்டு மறைந்து போகும் காலம் வரை மனிதன் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் அவன் பூர்வ பாப வினையின் தொடர்பிருக்கிறது சில துன்பங்கள் இப்போது செய்யும் பாபகர்மங்களால் உண்டாகும். மற்றைய பெரும்பாலான 'எதனால் உண்டாயிற்று' என்று புரிந்து கொள்ள முடியாத துன்பங்கள் பூர்வ பாபங்களால் விளைபவை.

இந்த அறிவை ஒரு மனிதன் அடைந்தால் துன்பத்தை விரும்பாமல் வாழ வேண்டும் மென்பதற்காகப் பாபம் செய்யாமல் வாழும் வாழ்க்கையை மேற்கொண்டு விடுவான். இப்போது செய்யும் ஒரு பாபத்தால் இப்போதைக்குக் கிடைக்கும் இன்பத்தை விட எதிர்காலத்தில் கிடைக்கப் போகும் துன்பத்தை ஒப்பிட்டால் துன்பமே மிக அதிகமாயிருக்கு மென்பதைத் தெரிந்து கொண்டால் மனிதன் அற்ப சந்தோஷத்துக்காக பெரிய துன்பத்தை உண்டாக்க வல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபங்களைச் செய்யத் துணிய மாட்டான்.

'பாபத்தைச் செய்யாமல் வாழவே முடியாதே?' என்பது பலரின் கருத்து. இக்கருத்துக்கு ஆதாரம் மனிதன் தன் வாழ்க்கைக்குத் தானே கர்த்தாவாக தன் உடல் பலம், மன பலம், பொருள் பலம் முதலியவைகளைக் கொண்டே தன் வாழ்க்கையைச் செம்மையாக நடத்தியாக வேண்டும் என்று நினைப்பதே காரணமாகும். தெய்வ பலமொன்றைப் பெற்று விட்டால், பாபங்களைச் செய்யாமலே இன்ப வாழ்க்கை நடத்த முடியும் என்று தெரிந்து கொள்ளாததே இத்தவறான கருத்துக்கு காரணம்.

இனிமேல் பாபம் செய்யாமல் நிறுத்திக் கொள்ளலாம். முன்பே செய்த பாபங்களின் பயனாக வரும் துன்பங்களை அனுபவித்துத்துத் தானேயாக வேண்டும்?' என்று நினைப்பதும் தவறு. ஏனெனில் காயத்ரீ உபானையால் பழைய பாபங்களும் அழிந்து போகும். அதனால் விளையும் தீமைகளும் விளையா.

அதனால் சாதாரண அறிவுடைய ஒருவன் பாபங்கள் செய்யாமல் நல்ல வாழ்க்கை வாழ வாழ்க்கையில் போராடியே ஆக வேண்டும். அத்துடன் காயத்ரீ உபாசனையால் சித்தத்தில் பதிந்துள்ள பாபசம்ஸ்காரங்களை விலக்கியாக வேண்டும்.

காயத்ரீ மந்திரத்தின் 'பர்கோ' என்ற சொல்லின் உச்சரிப்பால் ஜபத்தால் எழும் அலைகள் சித்தத்தில் பதிந்துள்ள பாப சமஸ்காரங்களை அகற்றிவிடும்.

பாபங்களை விலக்குவதில் காயத்ரீக்கு நிகரான மந்திரமே இல்லையென்று முன்பே சொன்னோமல்லவா? அதனால் முறையான காயத்ரீ உபாசனையால் சகல பாபங்களையும் போக்கி இன்பப் பெருவாழ்வை அடைய முயற்சி செய்வோம்.

- சுபம் பவது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகம் – 09

தவிர்க்க முடியாதபடி மரணத்துக்குள்ளாக வேண்டிய மனிதனும் தேவனாக முடியும். தேவர்களுக்குச் சமமான சுத்தமான பார்வை உயிரினங்களுக்குச் சேவை, மேலான காரியங்களைச் செய்தல் பலமில்லாதவர்களுக்குச் உதவி முதலியவைகளைச் செய்பவர்களின் உள்ளும், புறமும் தேவலோகம் உண்டாகும்.

விளக்கவுரை:-

**சுத்தமான பார்வை:-** குற்ற முள்ளவன் எதிலும் குற்றத்தையே காண்பான் கபடமுள்ளவன் அனைவரையும் கபடிகளாகவே காண்பான் தன்னைப் போலவே பிறரையும் கருதுவது மனித இயல்பு. உள்ளும், புறமும் தூய்மையானவன் எதிலும் களங்கத்தை, குற்றத்தை, பாபத்தை கான மாட்டான். உள்ளும், புறமும் தூய்மையாக்கி, அனைத்திலும் தூய்மையை காண்பது தெய்வ வாழ்க்கை.

**உயிரினங்களுக்குச் சேவை:-** தெய்வங்கள் வாழ்வதே மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்காகவே, அதுவே அவைகளின் தொழில், அவைகளைச் செய்யவே தெய்வங்கள் தேவலோக போகங்களில் திகழ்ந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. சகலர்க்கும் ஞானத்தையும் கல்வியையும் கொடுப்பதைத் தவிர கலைமகளுக்கு வேறென்ன வேலை? தேவையானோர்க்கெல்லாம் தேவையான அளவு செல்வத்தைக் கொடுத்துக் கொண்டருப்பதைவிட திருமகளுக்கு வேறு வேலை இல்லை. இப்படியே சகல தெய்வங்களும் பிற உயிர்களுக்குச் சேவை செய்வதையே தம் தொழிலாகக் கொண்டுள்ளன. இதே போல் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையர்களும் தெய்வங்களைப் போன்றவர்களே என்பதில் என்ன சந்தேகம்?

**மேலான காரியங்களைச் செய்தல்:-** மனிதன் அற்ப சந்தோஷத்திற்காக அவசரப்பட்டு கீழ்மையான பாபகாரியங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிட்டு பின்னால் அதன் பயனாக கொடிய துன்பங்களை அனுபவித்துத் துயருறுவான். தெய்வங்கள் பாபகாரியங்களை எதற்காகவும் எப்போதும் செய்யா, தமக்கும், பிறர்க்கும் எப்போதுமமேன்மையைத் தரும் மேலான காரியங்களையே செய்யும் அதைப் போல் எண்ணித் துணிந்து எந்த சந்தோஷத்தை நாடியும் கீழான பாபகாரியங்களைச் செய்யாமல் தன் பிறவிக்கு மேன்மையைத் தரும் மேலான காரியங்களையே செய்பவன் தெய்வத் தன்மைக்குப் பண்படுகிறான்.

பலமில்லாதவர்களுக்கு உதவி செய்தல்:- காயத்ரீ உபாசனையில் கடைசியாகச் செய்யும் பிரார்த்தனையில் 'பலமஸி பலம் மயிதேஹி, வீர்யமஸி, வீர்யம் மயிதேஹி' என்றெல்லாம் கேட்கிறோம். சூரியனிடத்தில் வெயில், ஒளி, சூடு, பிராணன் சகதி முதலியவை இருக்கின்றன. ஆனால் இவை யாதும் சூரியனின் சொந்த உபயோகத்திற்கு இல்லை. எப்போதுமே இவை பிறர்க்காகவே உலகத்துக்காகவே பயன்படுகின்றன. தேவர்களிடம் இருக்கும் சகலமும் பிறர்க்குப் பயன்படவே இருக்கின்றன். லஷ்மியின் செல்வம சரஸ்வதியின் ஞானம் பிறர்க்காகவே இருக்கின்றன. இதைப் போல் நம்மிடமிருக்கும் பலம், கல்வி, செல்வம் முதலியவைகளைக் கொண்டு அவை தேவையானோர்க்குப் பின் வாங்காது உதவி செய்பவர்கள் தெய்வ வாழ்க்கையை நடத்துபவர்களாவர்.

இத்தகைய பண்புகளால் மனிதர்களைச் சுற்றிலும் உள்ளும் இருக்கும் மனிதத் தன்மையின் சூழல் மாறுதலடைந்து, தெய்வச் சூழல் உற்பத்தியாகிறது. இதனால் அவர்கள் மானிட உலகில் மனித உருவில் நடமாடும் தெய்வங்களாக மாறி வாழ்ந்திருந்து பின் தேவருலகில் தெய்வங்களாக மாறிவிடுகிறார்கள்.

இத்தகைய தெய்வ வாழ்க்கைக்கான பண்பையும் ஆற்றலையும் மனிதன் தானாக பெற்றுவிட முடியாது. காயத்ரி மந்திரத்தின் "தேவஸ்ய" என்ற மந்திரத்தின் அலை இதற்கு வழி செய்து கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரீ உபாசனை மனிதனை தெய்வமாக மாற்றுகிறது.

- சுபம் பவது -

## சுலோகம் – 10

தீமஹி' என்ற சொல்லின் பொருள்:- நாமனைவரும் இருதயத்தில் எல்லா விதமான பவித்ர சக்திகளை தரிப்போமாக இதைத் தவிர மனிதன் சுகத்தையும் சாந்தியையும் பெற வேறு வழியில்லையென வேதம் சொல்கிறது.

விளக்கவுரை:-

பவித்ர சக்தி:- மனிதன் இவ்வுலகில் சக்திமானாக வாழ்வதற்கான சக்தியை செல்வம், பதவி, அரசுரிமை, அதிகாரம் உடல் வலிமை, கல்வி சொல் திறமை, அழகு, ஜனக்கட்டு, காரியத்திறமை முதலியவைகளால் பெறுகிறான். இவைகளின் சக்தியால் தன்வாழ்வை எவ்வளவோ உயர்த்திக் கொள்கிறான். ஆனால் இந்த சக்திகளால் அவன் உண்மையான சுகத்தையோ, சாந்தியையோ பெற்றுவிட முடியாது. செல்வம் அதிகமாய்ச் சேர மன நிம்மதி குறையுமன்றி உருவப்படாது. அதிகாரம் பலப்பட பலப்பட பகைமைகளின் அச்சம் வளர்ந்து வரும் உடல் வலிமை அதிகப்பட அதிகப்பட சண்டைகள் வளர்ந்து வரும். அழகு அதிகமாக சூழவுள்ளோரின் சூழ்ச்சிகளுக்கு அதிகமாய் உள்ளாக வேண்டி வரும். இப்படியே பௌதீகச் சக்திகளை மனிதன் பெறப் பெற அவன் உண்மையான சுக அனுபவமும் மன நிம்மதியும் குலையுமன்றி, இன்பம் பயப்பதாய் உருப்படாது. அதனால் இவையெல்லாம் மனிதனின் அறியாமையை ஒழித்து அவனை நிலையான இன்பத்தில் இருத்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வல்ல பவித்ர சக்திகள் அல்ல. இந்த சக்திகள் அதிகமாக ஆக அகங்காரம் வளர்ச்சியடைந்து மனிதன் அழிவதற்கு உதவுமன்றி அவனை வாழ வைக்க உதவாது. ஆக மனிதன் நிலையான இன்பத்தையும் நிச்சயமான சுகத்தையும் பெற விரும்பினால் அவன் தெய்வ சக்திகள் போன்ற பவித்ர சக்திகளை தன்னுள்ளத்தில் நிரப்ப முயற்ச்சி செய்ய வேண்டும். தெய்வ சக்திகள் அறியாமை இருளை அகற்றக் கூடியவையாகையால் அவை பவித்ர சக்திளாகும். காயத்ரீ மந்திரத்தின் 'தீமஹி' என்ற சொல்லின் ஜபத்தால் மனிதனில் திரளும் சக்தி இத்தகையை பவித்ர சக்தியாகும்.

தெய்வ சக்தியாம் பவித்ர சக்தியை பெறாத வரை வேறெத்தனை பௌதீகச் சக்திகளை மனிதன் பெற்றாலும் அவைகளால் நிலையான சுகத்தையும் இன்பத்தையும் பெறமுடியாதென மனிதரை உய்விக்க இறைவனால் அருளப்பட்ட வேதம் கூறுகிறது. பவித்ர சக்தி சில வருமாறு:- அஞ்சாமை, மனம் கலங்காமை, இரக்கம், தயை, கருணை, பரோபகார சிந்தனை, ஆன்மீக ஞான ஸ்ரவணம், நியாயம், அஹிம்சை, அடக்கம், வீர்யம், தைரியம், செய்ஞ் நன்றியறிதல், சோம்பலில்லாமை பக்தி முதலியவை இந்த சக்திகள் ஒவ்வொன்றும் மனிதனை நிலையான சுகத்தின் பக்கம் நிலையான சாந்தியின் பக்கம் நடத்திச் செல்பவை.

ஆனால் இயற்கையில் இத்தகைய நற்பண்புகளைப் பெற்றிராதவர் இந்த பவித்ர சக்திகளை எப்படி பெறமுடியும்? காயத்ரீ மந்திர ஜெபத்தில் ஜெபிக்கபடும் 'தீமஹி' என்ற சொல்லின் அலைக்கழிவு ஒருவனில் இத்தகைய பவித்ர சக்திகளைப் பெறுவதற்கான பண்பை உண்டாக்கும்.

அதனால் நாமும் இடை விடாமல் காயத்ரீ ஜபம் செய்து நம்மில் பவித்ர சக்திகளைப் பெறும் மார்க்கத்தில் முன்னேறுவோமாக.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுலோகம் — 11

'தியோ' என்ற சொல் கூறுவதாவது:- அறிவாளி, வேதாதி சாஸ்திரங்கள் சுத்த அறிவால் கடைந்து, அவைகளிலிருந்து வெண்ணை போல் உயரிய தத்துவத்தை அறியட்டும். ஏனென்றால் சுத்த அறிவால் தான் உண்மையை அறியலாம்.

விளக்கவுரை:-

வேதம், உபநிடதம், குறள் போன்ற அரிய நூல்களைப் படித்து பிறருக்கும் போதிக்கும் பலரும் கயவாளிகளாய் இருப்பதுண்டு. உலகுக்கெல்லாம் தர்மத்தைப் போதிக்கும் சிலர் அதர்மிகளாய் இருப்பதில்லையா? 'கடவுள் யாரென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்ற கருத்துடன் வேதாதி சாஸ்திரங்களை பலதைப் பன்முறை படித்தும் அதைப் புரிந்து கொள்ள முடியாமற் போனவர்கள் பலர்.

மொழி ஞானம் பெற்று சாஸ்திரங்களை படித்து விடுவதாலேயே ஒருவன் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் உண்மைகளைத் தெரிந்து கொண்டு விட முடியுமென்று சொல்ல முடியாது ஆங்கிலம் நன்றாக தெரிந்த வொருவன் ஆங்கில யந்திர நூலைப்படித்து யந்த்ரியாக (Engineer) ஆகிவிட முடியாது. தமிழ் நன்றாக தெரிந்தவொரு நாத்திகன் 'கைவல்ய நவநீதம்' படித்துப் பொருளறிந்து கொள்ள முடியாது. ஒரே செய்யுளுக்குப் பல பல பண்டிதர்கள் பல பொருட்களைக் கூற முடியும்.

ஒரு புத்தகத்தைப் படித்து அதையெழுதிய ஆசிரியர் எந்தக் கருத்தை விளக்க வேண்டுமென்று அதையெழுதினாரோ அதே கருத்தை அதிலிருந்து புரிந்து கொள்ள வேண்டுமானால் அதைப் படிப்பவன் அதையெழுதிய ஆசிரியரின் நிலையில் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆசிரியர் எந்த நிலையிலிருந்து மனநிலையிலிருந்து அறிவு நிலையில் இருந்து அதையெழுதினாரோ அதே நிலையிலிருந்து படிப்பவன் தான் ஆசிரியர் விளக்க விரும்பிய பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

வேதாதி சாஸ்திரங்கள் சத்தியத்தை இறைவனைப் பற்றி விளக்க உண்டாக்கப்பட்டவை. இந்த விளக்கத்தை சத்தியத்தை இறைவனை அறிந்த பெரியோர்கள் அவ்வறிவு நிலையில் தெரிந்த சுத்தமாக்கப்பட்ட அறியாமையை அகற்றிய அந்த நிலையிலிருந்து எழுதப்பட்டவை. இத்தகைய நூல்களை சத்தியத்தை அறியும், இறைவனை அறியும் உண்மையார்வம் உதிக்கப் பெருமக்கள் படித்தால் அதன் உள்ளேயிருக்கும் தத்துவங்களைச் சரியானபடி புரிந்து கொள்ள முடியுமா? இவைகளின் ஆழ்ந்த தத்துவங்களைப் புரிந்ந்து கொள்ள விரும்புபவன் முதலில் தன் அறிவை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவைகளிலுள்ள ஆழ்ந்த பாலிலுள்ள வெண்ணை போன்ற உயரிய தத்துவங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

வேதாதி சாஸ்திரங்களில் மறைந்துள்ள, போதித்துள்ள அரியத்தத்துவங்களைப் புரிந்து கொள்ளும் படியான அறிவுச் சுத்தத்தை தெளிவைப் பெறுவது எப்படி? இதற்கு விடை இதில் இருக்கிறது காயத்ரீ மந்திரத்தின் 'தியோ' என்ற சொல்லில் எழும் அலைகள் மனிதனின் அறிவை வேதாதி சாஸ்திர உண்மைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ளுமளவுக்குச் சுத்தம் செய்து வரும்.

காயத்ரீ ஜபத்தால் அறிவுச் சுத்தமடைந்த பின் வேதாதி சாஸ்திரங்களை படித்தால் அவைகளில் மறைந்துள்ள உயரிய, அரிய உபதேச தத்துவங்களைச் சரியாகப் புரிந்து கொள்வான்.

- சுபம் பவது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகம் – 12

'யோந' என்ற சொல்லின் பொருள்:- நம்மிடம் உள்ள சக்தி சாதனங்களில் நம் ஜீவனத்துக்கு எவ்வளவு வரை போதுமோ, அவ்வளவு வரை மட்டும் நமக்காக உபயோகித்துக் கொண்டு மற்றவைகளை அவைகள் இல்லாத குறைந்தவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டும்.

விளக்கவுரை:-

செல்வம், வலிமை, அறிவுடைமைகள் இறைவன் அருளால் மக்களுக்கு கிடைப்பவை படித்து படித்து ஓயாமல் படித்துக் கொண்டேயிருக்கும் வித்வான்கள், சேர்த்துச் சேர்த்து வரையில்லாமல் சேர்த்துக் கொண்டிருக்கும் செல்வர்கள், பயிற்சி செய்து செய்து பலத்தை பெற்றுக் கொண்டேயிருக்கும் பலவான்கள் இறைவனுக்கும் பகைவர்கள். ஏனென்றால் செல்வம் பலம் கல்வி அதிகமாக ஆக கூடவே அஹங்காரம் வளர்ச்சியடையும் பிறருக்குத் துன்பம் செய்யும் மனப்பான்மை அதிகமாகி வரும் பாபகாரியங்களைச் செய்யும் துணிவும் அதிகமாகி வரும். இவைகளிலிருந்து தப்ப ஒரே வழி இவைகளைக் கொண்டு பிறருக்கு உதவி செய்வதே இதனால் அகங்காரம் குறைந்து அன்பு வளரும்.

தனக்கெனச் சிறிதும் பயன்படுத்தி கொள்ளாமல் அனைத்தையுமே பிறருக்கு கொடுத்து விட வேண்டும் என்று சொல்லவில்லை. இதுதான் குறிகோளானால் இறைவன் மக்களுக்கு இந்தச் சம்பத்துகளைக் கொடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஓரளவுவரை எவ்வளவு குறைந்த அளவில் இவைகள் நம் ஜீவனத்துக்கு போதுமோ அந்த அளவுவரை நமக்கெனப் பயனபடுத்திக் கொண்டு அதிகமாயிருப்பதையே பிறருக்குக் கொடுத்துதவ வேண்டுமெனக் கீதை சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு கொடுத்துதவ வேண்டும்? உண்மையாக தேவையில்லாதவர்களுக்கு கொடுக்காமல் இவை குறைந்துள்ளதால் வாழ்க்கை நடத்த முடியாமல் வருந்துபவர்களுக்கே உதவ வேண்டும் ஏனெனில் அத்தகையவர்கள் தான் நம் உதவியால் மனமகிழ்ச்சியடைவார்கள், உள்ளத்திலிருந்து உண்மையாக வாழ்த்துவார்கள். இவ்வாழ்த்துதல் நமக்கு பயன் தரும் தேவயையில்லாதவர்களுக்கு குறைவில்லாதவர்களுக்கு உதவினால் நம் உதவியைக் கொண்டு அவர்கள் பாபங்கள் செய்யலாம் அப்பாபங்களைச் செய்விக்க் சொன்னவர்களாக நாம் ஆகிவிடுவோம். அதனால் அப்பாபங்களில் நமக்குப் பங்குண்டாகும்.

பணம், பலம், கல்வி பெற்றவர்களுக்கு எளிதில் பிறருக்கு உதவும் மனப்பான்மை உண்டாகாது. கஷ்டபட்டு சம்பாதித்தது அளவுக்கதிகமானாலும் கஷ்டப்படாமல் பிறர் அடையப் பார்க்க மனிதன் சகிக்க மாட்டான். ஒரு தெய்வீகப் பண்பு வளர்ந்தாலொழிய இம்மனப்பான்மை மனிதருக்குண்டாகாது. காயத்ரீ ஜெபத்தில் **'யோநஹ'** என்ற சொல்லின் அலையால் உண்டாகும் மூளை மனமாறுதலால் இப்பரந்த மனப்பான்மை சாதகரில் உண்டாகும். இதன் பயனாக சாதகர்கள் பிறருக்குச் சந்தோசமாகத் தம் அதிக உடமைகளை வழங்குபவர்களாக ஆகி தெய்வ பாதையில் முன்னேறுவார்கள்.

**- சுபம் பவது -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுலோகம் — 13

தன்னையும், பிறரையும் சத்திய நெறியில் செல்லத் தூண்ட வேண்டும். இத்தகைய தூண்டுதலால் செய்யப்படும் சகல காரியங்களும் தர்மம் எனப்படும்.

விளக்கவுரை:-

சுடர் விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டும். தான் எவ்வளவு நல்லவனாயினும் அப்படியே இருந்து வர தூண்டுகோலிருக்க வேண்டும். கெட்டவர்கள் தூண்டிக் கொண்டே இருந்தால் நல்லவர்களும் கெட்டவர்களாகி விடுவார்கள். கெட்டவர்களை நல்லவர்கள் தூண்டிக் கொண்டே இருந்தால் நல்லவர்களாகி விடமுடியும்.

மனிதனின் மனதுக்கும் அவ்வப்போது சன்மார்க்கத் தூண்டுதல் இருந்து வர வேண்டும். இப்படியில்லாவிட்டால் நல்ல மனமும் ஒரு நாளைக்கு கெட்டுப் போகலாம். அதனால் தெய்வ நெறியில் செல்பவர்களை எப்போதும் தன் மனதை சத்திய நெறியில் செல்லும்படி தூண்டிக் கொண்டிருக்க வேண்டும். இதற்குச் சாதகமாக அவர்கள் பிறரையும் சத்திய நெறியில் சென்று கொண்டிருக்கும் படித் தூண்டிக் கொண்டிருக்க வேண்டும். பிறரைத் தூண்டும் போதெல்லாம் தம்மைத்தாமே தூண்டிக் கொள்வதுமாகும்.

பிறருக்கு உபதேசம் செய்வது எளிதுதான். தனக்குத் தானே உபதேசித்துத் கொள்வதுதான் கடினம். காயத்ரீ சாதனை இதற்கு வழி செய்கிறது. காயத்ரீ மந்திரத்தின் 'ப்ரசோதயாத்' சொல் மறைமுக மொழியில் பேசாத பெருமொழியில் சாதகனின் மனதை சன்மார்க்க நெறியில் செல்லத் தூண்டுகிறது. இத்தூண்டுதலை பயன்படுத்திக் கொள்ள சாதகன் எப்போதும் பிறரை இந்நெறியில் செல்லத் தூண்டிக் கொண்டிருக்க வேண்டும். காயத்ரீ சாதகன் எந்த காரணத்தாலாவது சன்மார்க்க நெறியை நழுவ நினைத்தால் அவன் ஜெபித்து வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத்தின் 'ப்ரசோதயாத்' சொல்லின் அலைப் பிரபாவம் அவன் மனதைத் தூண்டிக் கொண்டிருப்பதால் அதற்கு இடந்தராமல் துணிவுண்டாகாமல் சன்மார்க்க நெறியிலேயே செல்ல வேண்டியதான நிர்பந்தம் உருவாகி சன்மார்க்கத்திலேயே சென்று விடுவான். இந்நிலையில் அவன் பண்பட அவன் உள் மனதில் ஏற்படும் சூக்ஷ்மத் தூண்டுதலின் பிரபாவத்தை வெளிமனதிலும் ஊன்றி பதித்துக் கொள்ள அவன் எப்போதும் பிறரை சன்மார்க்க' நெறியில் செல்லும்படித் தூண்டிக் கொண்டிருக்க வேண்டும்.

மனிதக் கருத்தில் பாபமாகக் கருதப்படுபவை தெய்வம் பார்வையில் புண்ணியமாயிருக்கலாம். போரிடுவதைப் பாபமாகக் கருதினான் அர்ஜுனன். அது புண்ணியமானது தானெனத் தூண்டினான் கண்ணன். அதனால் சன்மார்க்க தூண்டுதலால் செய்யும் கர்மங்கள் வெளிப்பார்வைக்கு அதர்மமாகத் தெரிந்தாலும் உண்மையில் அவை தர்மமாவே இருக்கலாம். தர்மாதர்மத்தை மனிதர் சாதாரணமாக நிர்ணயிக்க முடியாது. தெய்வ தூண்டுதலை அந்தராத்மாவின் தூண்டுதலைக் கொண்டு செய்யும் காரியம் பிறர் கண்ணுக்கு பாபமாகப் பட்டாலும் அது புண்ணியமென்றே என்ற உறுதியுடன் சாதகர்கள் செய்துவர வேண்டும். ஆனால் அது தெய்வத்தின் தூண்டுதல் தானா தன் சொந்தக் கருத்து அல்லவேயெனக் கவனித்துக் கொள்ள வேண்டும். காயத்ரீ உபாசகர்களுக்கு அந்தராத்மாவில் எப்போதுமே தெய்வத் தூண்டுதல் இருந்து வருவதால் அவர்கள் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையேயில்லை. உண்மையான உபாசகன் செய்யும் காரியங்களனைத்தும் தெய்வ சம்மதத்துடன் செய்யப்படும் தர்ம காரியங்களாகவே இருக்கும்.

- ஓம் தத்வமஸி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ குப்த விஞ்ஞானம்

காயத்ரி பற்றி மகரிஷிகளால் மறைத்து வைக்கப்பட்டு தகுந்தவர்களுக்கு மாத்திரமே குருசிஷ்ய பரம்பரையில் கற்பிக்கப்பட்டு வந்தஉலகம் அறிந்திராத இந்த அரிய காயத்ரி சாதனா முறைகள் பற்றிய விஞ்ஞானம் ஸ்ரீ கண்ணையாயோகீஸ்வரால் அருளப்பட்டு அனைவரும் பயின்று நன்மைபெறவேண்டுமென காயத்ரி பீடத்தால் கற்ப்பிக்கப்படுகிறது.

யோகமஹாரத்னா டாக்டர் பண்டிட். ஜி. கண்ணயா யோகி அவர்கள் அகஸ்திய மகரிஷியாலும் புலிப் பாணி மகரிஷியாலும் ஆட்கொள்ளப்பட்டு நீலகிரி மலைக் காடுகளில் அமைந்துள்ள சூஷ்ம ஆஸ்ரமத்தில் பல்லாண்டுகள் ராஜயோக, சித்தயோக, மந்திர, யந்திரதந்ரசாஸ்திரங்கள், காயத்ரி குப்தவிஞ்ஞானம் பயின்று உலகம்அறிந்திராமல் இலை மறை காய் போல் வாழ்த்தவர்.

உலகம் அறிந்திராத இவ்வுயர்ந்த ஞானியை சப்த ரிஷிகளில் ஒருவரால் நீலகிரி மலைக்காட்டில் ஆட்கொள்ளப் பட்டு அவரது வழிகாட்டலில் ஸ்ரீ கண்ணயா யோகீஸ்வரரை ஞான குருவாக அடைந்து, காயத்ரி தீக்ஷைபெற்று பல்லாண்டு காலம் காயத்ரி சாதனை செய்து, அன்னை காயத்ரி தேவியின் பரிபூரண அருளைப் பெற்று, உலகில் சாந்தி நிலவ காயத்ரி மந்திரமே சிறந்தது, அதை உலகிற்கு உபதேசித்து வா என்று குரு இட்ட ஆணையை சிரமேற் கொண்டு காயத்ரி மந்திர மகிமையை காயத்ரி பீடங்கள் அமைத்து உலகம் பூராகவும் பரப்பி வருகிறார் காயத்ரி சித்தர் ஆர்.கே. முருகேசு சுவாமி அவர்கள்.


ஸ்ரீ காயத்ரி பீடம்
82, லேடி மெக்கலம் வீதி
நுவரலியா
இலங்கை.

Sri Gayathrii Peetam (Int) Trust
#82,Laddy McCallums Drive
Nuwara Eliya
Sri Lanka.

Tel/Fax:0094 52 2222609
E-maill:gayathrim@sltnet.lk


Printed By Nethy's Graphics Colombo:- 0094- (0)777 708708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org